ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්වවිද්‍යාලය

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

EASTERN UNIVERSITY, SRI LANKA



2021

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT



கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

வருடாந்த அறிக்கை 2021

தூரநோக்கு

இலங்கையில் உயர் கல்விக்கான சிறந்த மையமாக விளங்குதல்.

நோக்கம்

நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரத் தேவைகளுக்கு ஏற்றவாறான சேவையினை வழங்குவதற்காக, தொழில் சமூக ஒத்துழைப்புடன் கூடிய உகந்த சூழ்நிலை மூலம் தகுதிவாய்ந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கு ஏதுவாக கற்றல், ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பரம்பலுக்கான வழிவகைகளை ஏற்படுத்துதல்.

இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகமானது பின்வரும் குறிக்கோள்களுடன் கூடிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது.

திறமையான மற்றும் வேலைவாய்ப்புடைய பட்டதாரிகளை உருவாக்கல்

- தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதற்காக பாடத்திட்டங்களை அவ்வப்போது திருத்துதல்.
- கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துதல்.
- சந்தைத் தேவை மற்றும் எதிர்காலத்தை நோக்கிய அடிப்படையில் புதிய கற்கை நெறிகளை அறிமுகம் செய்தல்.
- கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்தல்.

ஆராய்ச்சி, புதுமை மற்றும் முதுதத்துவமாணி பயிற்சி என்பவற்றில் சிறப்பான தரத்தை அடைதல்

- ஆய்வில் சிறந்து விளங்குவதற்கான தரத்தினை அடைதல்.
- ஆய்வுசார் பட்டக் கற்கைநெறிகளை வலுப்படுத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களில் தொழில்சார் ஒருங்கிணைப்பு மற்றும் வணிகமயமாக்கல் என்பவற்றை மேம்படுத்துதல்.

நிறுவன திறன் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துதல்

- ஊழியர்களின் வலிமை மற்றும் தரத்தை மேம்படுத்துதல்.
- உட்கட்டடைப்பு வசதிகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- ஆளுமை மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல்.
- செயல் திறன் மிக்க தர உத்தரவாத அமைப்பினைப் பேணுதல்.

சமூக ஈடுபாடு, ஆலோசனை மற்றும் எல்லை கடந்த செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துதல்

- பரந்த அளவிலான பங்கேற்பு மற்றும் உயர் கல்விக்கான சமனான அணுகல்.
- சமூக சேவைகள் மற்றும் எல்லை கடந்த செயற்பாட்டுத் திட்டங்களை மேம்படுத்துதல்.
- ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- தொழில் முனைவு மற்றும் கூட்டாண்மையை ஊக்குவித்தல்.

உபவேந்தரின் அறிக்கை



பேராசிரியர் வ. கனகசிங்கம்
உபவேந்தர்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பல்கலைக்கழகமானது ஆறு பீடங்கள், திருகோணமலையில் ஓர் வளாகம் மற்றும் அழகியல் கற்கைகளுக்கான நிறுவனம் (சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள்) என்பவற்றைக் கொண்டுள்ளது. எமது பல்கலைக்கழகமானது மாணவர்களுக்கான சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மேலும் அனைத்து இளங்கலை மாணவர்களுக்கும் விடுதி வசதிகளை வழங்கும் கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

"சமூக நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சிறந்த கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சியை அங்கீகரிப்பதன் மூலம் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையை உலகத்தரம் வாய்ந்த அறிவு மையமாக" உயர்த்துவதே எனது தூரநோக்கு ஆகும். எமது பல்கலைக்கழகமானது இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஓர் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இக் கிழக்கு மாகாணத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றன. எனவே எமது பல்கலைக்கழகம் இம் மூன்று சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சமூகப் பொறுப்பைக் கொண்டுள்ளதோடு மற்றும் பல இன மற்றும் பல மத சமூகங்களின் ஒருங்கிணைப்புக்கான மையமாக செயல்படுகிறது.

பல்கலைக்கழகமானது ஓர் சமூக அமைப்பாகும், இது பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சனை, தொழில்துறை இணைப்புக்களை ஏற்படுத்துவதில் குறைபாடுகள் மற்றும் குறைவாக வணிகமயமாக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி வெளியீடுகள் போன்ற சமகாலப் பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் இணைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்தின் முக்கிய பெறுப்பாக (i) வேலைவாய்ப்பு மற்றும் திறமையான பட்டதாரிகளை உருவாக்குதல், (ii) வணிகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் (iii) சமூக சேவைகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பனவாகும். தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்துடன் "விளைவு அடிப்படையிலான, அறிவியல் பூர்வமாகத் தெளிவான மற்றும் சமூக இணைக்கப்பாட்டுடனான" முயற்சிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் சமூகப் பொருளாதார நிலை மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் பின்னணியில் பிராந்தியத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான பல ஒழுங்குமுறை மற்றும் பங்கேற்பு அணுகுமுறை மூலம் இவை அடையப்படும்.

உயர்கல்வித் துறையில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன பிராந்திய மற்றும் தேசிய வளர்ச்சிக்கான அடிப்படைகளை வலுப்படுத்தி வழிவகுப்பதற்கான முக்கிய வெளியீடாக அமைகின்றன. எமது பல்கலைக்கழகத்தை கௌரவம் மிக்கதாக மாற்றுவதற்கும் பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் எதிர்பார்க்கப்படும் தேவைகளுக்கு ஏற்ப விளைவுகளை உறுதி செய்வதற்கும் எங்களுடன் இணைந்து பங்களிக்குமாறு அனைத்துப் பங்குதாரர்களையும் நான் அன்புடன் அழைக்கிறேன்.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை, மூதவை, கல்வி சமூகம், நிர்வாகம் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு 2021 ஆம் ஆண்டை பயனுள்ளதாக மாற்றியமைக்காக இதன் மூலம் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பேராசிரியர் வ. கனகசிங்கம்
உபவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருளடக்கம்

துரநோக்கு i
நோக்கம் i
இலக்குகள் மற்றும் நோக்கங்கள் ii
உபவேந்தரின் அறிக்கை iii
பொருளடக்கம் iv
எங்களைப் பற்றி 1
பல்கலைக்கழக நிருவாகக் கட்டமைப்பு 2
பேரவை 3
மூதவை 3
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் கற்கை நெறிகள் 6
புதிய பீடம் மற்றும் கற்கைநெறிகள் 7
அடைவில் வீழ்ச்சியும் காரணங்களும் 8
எதிர்காலத் திட்டம் 9
2021 இன் சிறப்பம்சங்கள் 9
மனித வளங்களின் விபரங்கள்: 11
மாணவர் பரம்பல் 12
உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள் 12
வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள் 16
பட்டதாரிகளின் விபரங்கள் 16
ஊழியர்களின் பரம்பல் 17
கல்விசார் ஊழியர்கள் 20
கல்விசாரா ஊழியர்கள் 26
சாதனைகள் 27
ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் வெளியீடுகள் 27
இணைய ஆய்விதழ்கள் உட்பட குறியிடப்பட்ட ஆய்விதழ்களில் வெளியிடப்பட்ட ஆய்வுகள் 28
வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் புத்தக அத்தியாயங்கள் 35
2021ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆய்விதழ்கள் 36
பெற்றுக் கொண்ட விருதுகள்: 36
கல்வியியலாளர்களின் சாதனைகள் மற்றும் விருதுகள் 37
மாணவர்களின் சாதனைகள் மற்றும் விருதுகள் 37
நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விபரங்கள்: 38
நிதி நிலைமைகள் 40
2021 மார்கழி 31 ஆம் திகதி திறைசேரியால் வெளியிடப்பட்ட நிதி நிலை பற்றிய அறிக்கை 40
மீண்டெழும் செலவீன விபரம் 41
மூலதனச் செலவு விபரங்கள் 41
செயற்திட்டங்களின் விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதிகள்) 42
செயற்திட்டங்களின் செலவு விபரம் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதி) 42
நிதி நிலைமை பற்றிய விபரம் (செலவு) 43
நிதி நிலைமை பற்றிய விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்) 43
நிதி செயற்றிறன் ஆய்வு - 2021 44
2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விபரம் 44
நிதி அறிக்கைகள் - 2021 45
5 ஆண்டுகளின் முக்கிய புள்ளிவிபரங்கள் 69
கணக்காய்வுக் குழுத் தலைவரின் 2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 70
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்படும் பேண்தகு அபிவிருத்தித் திட்டங்கள் 73
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2021 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்து 1978 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 74
இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2021 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்து 1978 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு 82

எங்களைப் பற்றி

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், 2021 ஆம் ஆண்டிற்கான தனது கல்வி சார் நடவடிக்கைகளைப் பிரதான வளாகத்தின் ஆறு பீடங்கள் மற்றும் 36 கல்வி சார் துறைகளின் ஊடாகவும், திருகோணமலை வளாகத்தின் இரு பீடங்கள், நான்கு கல்வி சார் துறைகள் மற்றும் ஒரு சித்த மருத்துவ அலகின் ஊடாகவும் தொடர்ந்தும் வழங்கிவருகிறது.


இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், 1981 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01ஆம் திகதி, விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடம் என்பவற்றை உள்ளடக்கி மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி என்னும் பெயரில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் முழுமையான பல்கலைக்கழகமாக 1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01ஆம் திகதி தரமுயர்த்தப்பட்டது. மேலும் கலாசார கற்கைகள் பீடம் மற்றும் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம் என்பன 1988 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 1991 ஆம் ஆண்டில் கலாசாரக் கற்கைகள் பீடமானது கலை மற்றும் கலாசார பீடம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பீடமான தொழில்நுட்ப பீடம், 2018 ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம், ஆரம்பத்தில் திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி எனும் பெயருடன் 1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பல்கலைக்கழகக் கல்லூரி முறைமை அகற்றப்பட்டபோது திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 06ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 2001 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி முதல் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகமாக தரம் உயர்த்தப்பட்டது. அத்துடன் தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டு பீடங்களும் பின்னர் சித்த வைத்திய அலகும் ஸ்தாபிக்கப்பட்டன.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமானது (சு.வி.அ.க.நி) 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. இவ்வாறு இணைக்கப்படும் முன்னர் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி என்னும் பெயருடன் 1981 ஆம் ஆண்டு பிராந்திய விவகாரங்கள் மற்றும் இந்து கலாசார அமைச்சினால் நிறுவப்பட்டு அதன் பின்னர் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வந்தது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது உள்நாடு மற்றும் வெளிநாட்டிலுள்ள அரசாங்க மற்றும் தனியார் அமைப்புகளின் தேவைகளுக்கு ஏற்றவாறான தகைமைவாய்ந்த பட்டதாரிகளை உருவாக்குமுகமாக தமது கல்வி நடவடிக்கைகளில் வலுவான கவனம் செலுத்தி வருகின்றது. மேலும் பல்கலைக்கழகத்தில் பல்துறை சார் ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதோடு பங்குதாரர்கள் மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப செயற்பட்டு இப்பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஒற்றுமையில் பெரிதும் பங்களிப்புச் செலுத்தியும் வருகின்றது.

பல்கலைக்கழக நிருவாகக் கட்டமைப்பு



சு.வி.அ.க.நி - சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
பி.ப - பிரதிப் பதிவாளர்
உ.ப. - உதவிப் பதிவாளர்
உ.நி. - உதவி நிதியாளர்

சி.உ.ப - சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
சி.உ.நி - சிரேஷ்ட உதவி நிதியாளர்
சி.உ.உ.க. - சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்

பி.ப - பிரதிப் பதிவாளர்
பி.நி - பிரதிப் நிதியாளர்

படம் 1: நிருவாகக் கட்டமைப்பு - கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பேரவை

பல்கலைக்கழகத்தின் பேரவையானது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 44 இன் படி திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 24ற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பேரவை என்பது பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகாரமாகும், துணைவேந்தரைத் தலைவராகவும் பதிவாளரை சபையின் செயலாளராகவும் கொண்டுள்ளது.

பேரவையின் பதவிமுறை உறுப்பினர்கள்

பேராசிரியர். எப். சி. றாகல்	- உபவேந்தர் – தலைவர்
பேராசிரியர். வி. கனகசிங்கம்	- வளாகத் தலைவர், திருகோணமலை வளாகம் (கார்த்திகை 2021 வரை)
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பதில் வளாகத் தலைவர், திருகோணமலை வளாகம் (மார்கழி 2021 இல் இருந்து)
கலாநிதி. எம். பக்திநாதன்	- பீடாதிபதி/விவசாய பீடம் - பதில் பீடாதிபதி/தொழில் நுட்ப பீடம்
கலாநிதி. ஜெ. கெணடி	- பீடாதிபதி/கலை மற்றும் கலாசார பீடம்
லாநிதி. எஸ். ஜெயராஜ்	- பீடாதிபதி/வணிக மற்றும் முகாமைத்துவ படம்
வைத்தியக் கலாநிதி. ஏ.என். அருள்பிரகாசம்	- பீடாதிபதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
கலாநிதி. பி. பிரதீபன்	- பீடாதிபதி/விஞ்ஞான பீடம்
கலாநிதி. கே. பிரேமகுமார்	- பதில் பீடாதிபதி/தொழில் நுட்ப பீடம் (ஆடி 2021 வரை)
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பீடாதிபதி/பிரயோக விஞ்ஞான பீடம் திருகோணமலை வளாகம்
திருமதி. கே. சந்திரகுமார்	- பீடாதிபதி/தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீடம் திருகோணமலை வளாகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

பேராசிரியர். எம். செல்வராஜ்
பேராசிரியர். ஆர். சுலைமான் லெப்பே
வைத்தியக் கலாநிதி. எச். ஆர். தம்பவிட்ட
கலாநிதி. எஸ். எம். குசைன்
திரு. எஸ். சண்முகம்
கலாநிதி. ஜி. சுகுணன்
பொறியியலாளர். எஸ். மோகனராஜ்
பொறியியலாளர். எஸ். திலகராஜ்
திரு. டி. சிவநாதன்
திரு. பி. பிரேமநாத்
திரு. ஏ. எல். ஜொபர் சாதிக்
பொறியியலாளர். என். சிவலிங்கம்
திருமதி. எஸ். ஜே. எம். எஸ். சமரகோண்

மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்

கலாநிதி. கே. இராஜேந்திரம்	(ஐப்பசி 2021 இல் இருந்து)
வைத்தியக் கலாநிதி. கே. அருளானந்தம்	

பேரவையின் செயலாளர்

திரு. ஏ. பகீரதன்	- பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூதவை

பல்கலைக்கழகத்தின் மூதவையானது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 46 (2) இன் படி திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தம்) சட்டத்திற்கு அமைவாக அமைக்கப்பட்டுள்ளது. மூதவையானது கல்வியியலாளர்களை உள்ளடக்கிய அமைப்பாகக் காணப்படுவதோடு பதிவாளர் இச்சபையின் செயலாளராகவும் தொழிற்படுவார்.

மூதவையின் உறுப்பினர்கள்

பேராசிரியர். எப். சி. றாகல்	- உபவேந்தர் - தலைவர்
பேராசிரியர். வி. கனகசிங்கம்	- வளாகத் தலைவர்இ திருகோணமலை வளாகம் (கார்த்திகை 2021 வரை)
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பதில் வளாகத் தலைவர்இ திருகோணமலை வளாகம் (மார்கழி 2021 இல் இருந்து)
பேராசிரியை. (திருமதி). ஏ. முருகதாஸ்	- பிரதி இயக்குனர்/சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் (மாசி 5, 2021 வரை)
கலாநிதி. (திருமதி). எப். பி. கெணடி	- இயக்குனர்/சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் (மாசி 17, 2021 இல் இருந்து)
கலாநிதி. எம். பக்திநாதன்	- பீடாதிபதி/விவசாய பீடம் - பதில் பீடாதிபதி/தொழில் நுட்ப பீடம்
கலாநிதி. ஜெ. கெணடி	- பீடாதிபதி/கலை மற்றும் கலாசார பீடம்
கலாநிதி. எஸ். ஜெயராஜ்	- பீடாதிபதி/வணிக மற்றும் முகாமைத்துவ பீடம்
வைத்தியக் கலாநிதி. ஏ. என். அருள்பிரகாசம்	- பீடாதிபதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்
கலாநிதி. பி. பிரதீபன்	- பீடாதிபதி/விஞ்ஞான பீடம்
கலாநிதி. கே. பிரேமகுமார்	- பதில் பீடாதிபதி/தொழில் நுட்ப பீடம் (ஆடி 2021 வரை)
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- பீடாதிபதி/பிரயோக விஞ்ஞான பீடம் திருகோணமலை வளாகம்
திருமதி. கே. சந்திரகுமார்	- பீடாதிபதி/தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள் பீடம் திருகோணமலை வளாகம்

சிரேஸ்ட பேராசிரியை. (திருமதி). டி. மகேந்திரன்	- சிரேஸ்ட பேராசிரியர், விவசாய இரசாயனவியல்
சிரேஸ்ட பேராசிரியர். பி. வினோபாபா	- சிரேஸ்ட பேராசிரியர், விலங்கியல்
பேராசிரியர். வி. குணரெட்ணம்	- பேராசிரியர், அரசியல் விஞ்ஞானம்
பேராசிரியர். டி. கிறிஸ்ணமோகன்	- பேராசிரியர், அரசியல் விஞ்ஞானம்
பேராசிரியர். எஸ். திருக்கணேஷ்	- பேராசிரியர், கணிதம்
பேராசிரியர். ஏ. ஜி. ஜோன்பிள்ளை	- பேராசிரியர், கணிதம்
பேராசிரியை. (திருமதி.) ரி. எச். சேரன்	- பேராசிரியர், பயிர் அறிவியல்
பேராசிரியை. (திருமதி). ஏ. முருகதாஸ்	- பேராசிரியர், தமிழ்
பேராசிரியர். எஸ். சுதர்சன்	- பேராசிரியர் பயிர் அறிவியல்
பேராசிரியை. (திருமதி). பி. பிரேமானந்தராஜா	- பேராசிரியர் விவசாய இரசாயனவியல்
பேராசிரியர். எம். உமாகாந்	- பேராசிரியர் சிகிச்சைகள் விஞ்ஞானம் (சித்திரை 2021 இல் இருந்து)
பேராசிரியர். எம். சிதம்பரேசன்	- பேராசிரியர் இரசாயனவியல் (சித்திரை 2021 இல் இருந்து)
பேராசிரியர். ஏ. அன்ட்ரூ	- பேராசிரியர் முகாமைத்துவம் (சித்திரை 2021 இல் இருந்து)
பேராசிரியர். வி. இன்பமோகன்	- பேராசிரியர் நுண்கலை (சித்திரை 2021 இல் இருந்து)
திரு. டபிள்யூ. ஜே. ஜெயராஜ்	- நூலகர்
கலாநிதி (திருமதி.) என். ஆர். பெனான்டோ	- துறைத் தலைவர்/விவசாய உயிரியல்
திரு. ஆர். திவ்யதர்சன்	- பதில் துறைத் தலைவர்/மிருகவியல் விஞ்ஞானம் (தை 2021 இல் இருந்து
கலாநிதி. டி. கிரிதரன்	- துறைத் தலைவர்/பயிர் அறிவியல்
பேராசிரியை. (திருமதி). பி. பிரேமானந்தராஜா	- துறைத் தலைவர்/விவசாய இரசாயனவியல் (தை 2021 இல் இருந்து)
திருமதி. டி. கிரிதரன்	- துறைத் தலைவர்/விவசாயப் பொருளியல்
திரு. எம். இராஜேந்திரன்	- துறைத் தலைவர்/விவசாயப் பொறியியல்
திரு. ஆர். கிருபராஜா	- துறைத் தலைவர்/புவியியல்
திரு. கே. ரவிச்சந்திரன்	- துறைத் தலைவர்/நுண்கலை
கலாநிதி. எம். எச். எம். ஜலீல்	- துறைத் தலைவர்/அரபிக்
திரு. கே. மதிசீலன்	- துறைத் தலைவர்/ஒப்பீட்டுச் சமயம் மற்றும் சமூக நல்லிணக்கம்
பேராசிரியர். எஸ். சந்திரசேகரம்	- துறைத் தலைவர்/மொழிகள்
திரு. கே. சத்தியசேகர்	- துறைத் தலைவர்/சமூக விஞ்ஞானம் (தை 2021 இல் இருந்து)
திரு, ஆர். பிரேம்குமார்	- துறைத் தலைவர்/தத்துவம் மற்றும் விழுமிய கற்கைகள் (தை 2021 இல் இருந்து)
திரு. ஏ. எல். எம். முஜஹிட்	- துறைத் தலைவர்/இஸ்லாமிய கற்கைகள்
கலாநிதி. வி. குணபாலசிங்கம்	- துறைத் தலைவர்/இந்து நாகரிகம் (தை 2021 இல் இருந்து)
கலாநிதி. சி. அருள்மொழி	- துறைத் தலைவர்/கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை
திரு. எஸ். கே. சிவகணேஷன்	- துறைத் தலைவர்/வரலாறு
கலாநிதி. எஸ். உமாசங்கர்	- துறைத் தலைவர்/ஆங்கில மொழி கற்பித்தல்
திரு. டி. பரந்தாமன்	- துறைத் தலைவர்/முகாமைத்துவம் (மாசி 2021 வரை)
கலாநிதி. என். இராஜேஸ்வரன்	- துறைத் தலைவர்/முகாமைத்துவம் (பங்குனி 2019 இல் இருந்து)
கலாநிதி. (திருமதி). ஜே. சுரேஸ்	- துறைத் தலைவர்/பொருளியல்
பேராசிரியர். ஏ. அன்டன் அருள்ராஜ்	- துறைத் தலைவர்/முகாமைத்துவம்
கலாநிதி. பி. றொட்னி பெனாண்டோ	- துறைத் தலைவர்/பௌதிகவியல்
கலாநிதி. எம். கோணேஸ்வரன்	- துறைத் தலைவர்/இரசாயனவியல்
திரு. பி. பரமதேவன்	- துறைத் தலைவர்/கணிதம்
கலாநிதி. டி. மதிவேந்தன்	- துறைத் தலைவர்/தாவரவியல்
கலாநிதி. (திருமதி.) சி. ஜி. தேவதாசன்	- துறைத் தலைவர்/விலங்கியல்
கலாநிதி. வி. ஜே. நவீன்ராஜ்	- துறைத் தலைவர்/மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள், திருகோணமலை வளாகம்
திரு. டி. பாஸ்கர்	- துறைத் தலைவர்/வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் கற்கைகள், திருகோணமலை வளாகம்
திரு. எம். ரமணன்	- துறைத் தலைவர்/கணனி விஞ்ஞானம் (ஆடி 2019 வரை)
திரு. எஸ். தட்சணாமூர்த்தி	- துறைத் தலைவர்/கணனி விஞ்ஞானம் (ஐப்பசி 2019 இல் இருந்து)
திரு. எஸ். லோகீஸ்வரன்	- துறைத் தலைவர்/பிரயோக விஞ்ஞானம்
வைத்தியக் கலாநிதி. எம். திருக்குமார்	- துறைத் தலைவர்/மருத்துவ அறிவியல்
வைத்தியக் கலாநிதி. வி. ஆர். பிரான்சிஸ்	- துறைத் தலைவர்/நோயியல் இயற்பியல்
வைத்தியக் கலாநிதி. எம். றொசினி	- துறைத் தலைவர்/மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி
வைத்தியக் கலாநிதி. (திருமதி.) எம். தயாபரன்	- துறைத் தலைவர்/மனித உயிரியல் (தை 2021 இல் இருந்து)
வைத்தியக் கலாநிதி. கே. அருளானந்தம்	- துறைத் தலைவர்/ஆரம்ப சுகாதார பராமரிப்பு
வைத்தியக் கலாநிதி. எஸ். சுஜேந்திரன்	- துறைத் தலைவர்/துணை சுகாதார விஞ்ஞானம்
திருமதி. பி. கருணாரத்ன	- பதில் துறைத் தலைவர்/உயிர் அமைப்புத் தொழில்நுட்பம்
திரு. எஸ். சோதீஸ்வரன்	- பதில் துறைத் தலைவர்/பன்முகக் கற்கைகள் (2021, மாசி 5 ஆம் திகதி வரை)
கலாநிதி. என். பிரதீஷ்	- பதில் துறைத் தலைவர்/பன்முகக் கற்கைகள் (2021,மாசி 17 ஆம் திகதியில் இருந்து கார்த்திகை வரை)
கலாநிதி. எஸ். சிவரெட்ணம்	- துறைத் தலைவர்/கட்புல மற்றும் தொழில்நுட்ப கலைகள், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கலாநிதி. பி. பிரதீபன்	- துறைத் தலைவர்/சங்கீதம், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கலாநிதி. ஜி. ஜெயரஞ்சினி	- துறைத் தலைவர்/நடனம் மற்றும் நாடகமும் அரங்கியலும், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
திரு ஆர். திவ்யதர்சன்	- பிரதிநிதி/விவசாய பீடம் (தை 2021 இல் இருந்து)
திருமதி. பி. கருணாரத்ன	- பிரதிநிதி/விவசாய பீடம் (தை 2021 இல் இருந்து)
கலாநிதி. கே. இராஜேந்திரம்	- பிரதிநிதி/கலை மற்றும் கலாசார பீடம்
திரு. சி. சிவநாயகம்	- பிரதிநிதி/கலை மற்றும் கலாசார பீடம்
கலாநிதி. டி. பிரபாகரன்	- பிரதிநிதி/வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம் (ஆடி 2021 வரை)

கலாநிதி. எஸ். பாலேந்திரன்	- பிரதிநிதி/வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம் (ஆடி 2021 வரை)
கலாநிதி பி. இளங்கோ	- பிரதிநிதி/விஞ்ஞான பீடம்
கலாநிதி. (திருமதி.) சி. மகேந்திரநாதன்	- பிரதிநிதி/விஞ்ஞான பீடம் (2021, மாசி முதல் ஆடி 7 ஆம் திகதி வரை)
பேராசிரியர். எஸ். அரசரெட்ணம்	- பிரதிநிதி/விஞ்ஞான பீடம் (ஆடி 19 ஆம் திகதி 2021 இல் இருந்து)
திரு. எஸ். சண்முகநாதன்	- பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் (தை 2021 இல் இருந்து)
வைத்தியக் கலாநிதி. திருமதி எம். தயாபரன்	- பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் (தை 2021 இல்)
வைத்தியக் கலாநிதி. வி. தட்சணாமூர்த்தி	- பிரதிநிதி/சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் (மாசி 2021 இல் இருந்து)
செல்வி. எஸ். கேதிக்கா	- பிரதிநிதி/பிரயோக விஞ்ஞான பீடம், திருகோணமலை வளாகம்.
திரு. எஸ். பரந்தாமன்	- பிரதிநிதி/பிரயோக விஞ்ஞான பீடம், திருகோணமலை வளாகம்.
திரு. டி. ஆர் .லக்ஜீவ	- பீடாதிபதி/தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள் பீடம், திருகோணமலை வளாகம்
செல்வி. கே. ஜி. எல். ஏ. என். எஸ். ஜயவர்த்தன	- பீடாதிபதி/தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள் பீடம், திருகோணமலை வளாகம்
வைத்தியக் கலாநிதி. என். வர்ணகுலேந்திரன்	- பதில் துறைத் தலைவர்/சித்த வைத்திய அலகு, திருகோணமலை வளாகம்.

மூதவையின் செயலாளர்

திரு. ஏ. பகீரதன்	- பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

 # 1

இயற்கைச் சுட்டெண்

இல் இலங்கைப்
பல்கலைக்கழகங்களுக்கு
இடையில் முதலாவது இடம்

 # 11

இலங்கைப்
பல்கலைக்கழகங்களுக்கு
இடையிலான

இணையத் தரவரிசை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் கற்கை நெறிகள்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகமானது தனது பிரதான வளாகத்தில் விவசாயம், கலை மற்றும் கலாசாரம், வணிகம் மற்றும் முகாமைத்துவம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள், விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பம் உள்ளடங்கலாக ஆறு பீடங்களையும் திருகோணமலை வளாகத்தில் தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள், மற்றும் பிரயோக விஞ்ஞானம் உள்ளடங்கலாக இரண்டு பீடங்களையும் கொண்டுள்ளது. மேலும் இப் பல்கலைக்கழகம் இளமாணி, முதுமாணி, ஆராய்ச்சிப் பட்டங்கள், டிப்ளோமா, மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்கிவருகின்றது. பீடங்களில் அமைந்துள்ள கல்விசார் திணைக்களங்கள், மற்றும் அலகுகளின் ஊடாக வழங்கப்படும் கற்கைநெறிகளின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

விவசாயம் பீடம்

கௌரவ விஞ்ஞான இளமாணி (விவசாயம்);
விஞ்ஞான முதுமாணி (விவசாயம்)

ஆய்வுப் பட்டங்கள்

முதுதத்துவமானி

கலை மற்றும் கலாசாரம்

கலை இளமாணி (பொது);
அரபிக்கில் கௌரவ கலை இளமாணி;
ஒப்பீட்டுச் சமயத்தில் கௌரவ கலை இளமாணி;
நாடகம் மற்றும் அரங்கியலில் கௌரவ கலை இளமாணி;
பொருளாதாரத்தில் கௌரவ கலை இளமாணி;
நுண்கலையில் கௌரவ கலை இளமாணி;
புவியியலில் கௌரவ கலை இளமாணி;
இந்து நாகரிகத்தில் கௌரவ கலை இளமாணி;
வரலாற்றில் கௌரவ கலை இளமாணி;
தத்தவவியலில் கௌரவ கலை இளமாணி;
அரசியல் விஞ்ஞானத்தில் கௌரவ கலை இளமாணி;
சமூகவியலில் கௌரவ கலை இளமாணி;
தமிழில் கௌரவ கலை இளமாணி;
மொழிபெயர்ப்புக் கற்கைகளில் கௌரவ கலை இளமாணி;
கௌரவ கல்வி இளமாணி;
கலை முதுமாணி.

ஆய்வுப் பட்டங்கள்

முதுதத்துவமாணி மற்றும் தத்துவமாணி.

விஞ்ஞானம் பீடம்

விஞ்ஞான இளமாணி (பொது);
தாவரவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
இரசாயனவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
கணினி விஞ்ஞான கௌரவ விஞ்ஞான இளமாணி;
கணிதத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
பௌதிகவியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
விலங்கியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
கல்வியியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி;
சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி.

ஆய்வுப் பட்டங்கள்

முதுதத்துவமாணி மற்றும் தத்துவமாணி.

தொழில்நுட்ப பீடம்

விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவு திறனில் தொழில்நுட்ப உயிர் அமைப்பு இளமாணி

வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடம்

கௌரவ வர்த்தக இளமாணி;
கணக்கியல் மற்றும் நிதியியலில், கௌரவ வர்த்தக இளமாணி;
நிறுவன மேம்பாட்டில் கௌரவ வர்த்தக இளமாணி;
வணிக பொருளாதாரத்தில் கௌரவ வர்த்தக இளமாணி;
கௌரவ வணிக முகாமைத்துவ இளமாணி;
மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவ இளமாணி;
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவ இளமாணி;
முகாமைத்துவ பட்டப் பின்படிப்புக் கற்கை (PGDM);
வணிக முகாமைத்துவ முதுமாணி;
பொருளாதார அபிவிருத்தி முதுமாணி.

ஆய்வுப் பட்டங்கள்

முதுதத்துவமாணி.

சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானம்

மருத்துவ இளமாணி மற்றும் சத்திர சிகிச்சை இளமாணி (ஆடீடளூ);
தாதியியல் விஞ்ஞான இளமாணி.

திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம்

முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி;
முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
தகவல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி;
மொழிகளில் சிறப்பு கலை இளமாணி;
மொழிகளில் கலை இளமாணி;
தொடர்பாடல் கற்கைகளில் கலை இளமாணி

பிரயோக விஞ்ஞான பீடம்

பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞான இளமாணி;
கணினி விஞ்ஞான இளமாணி (BCS);
சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை இளமாணி (BSMS)

வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் மையம்

இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகமானது வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான கற்கைகளை 1991 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. விவசாயம், விஞ்ஞானம், மற்றும் வணிகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பீடங்கள் மாத்திரமே ஆரம்பத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக் (வெ.ப) கற்கைகளை வழங்கிவந்தன. பீடங்களான கலை மற்றும் கலாசாரம், மற்றும் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் என்பன வெ.ப கற்கைகளை 2004 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தன. மேலும் திருகோணமலை வளாகத்தில் இவ் வெ.ப கற்கைகள் 2006 ஆம் ஆண்டில் இருந்து வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான வெ.ப கற்கைகள், பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினைப் பெரும்பான்மையான மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதோடு இத்தகைய கற்கைநெறிகள் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் மையத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன, பல்கலைகழகத்தின் பிரதான வளாகத்தில் கலை இளமாணி, வணிக நிர்வாக இளமாணி, விவசாயத்தில் விஞ்ஞான இளமாணி, விஞ்ஞான இளமாணி, தாதியியலில் விஞ்ஞான இளமாணி, மற்றும் வணிக முகாமைத்துவ இளமாணி என்பனவும் திருகோணமலை வளாகத்தில் முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி, மற்றும் தொடர்பாடலில் கலை இளமாணி என்பனவும் ஆகும்.

டிப்ளோமா கற்கைநெறிகள்

விவசாய பீடமானமானது நிலையான விவசாயத்தில் டிப்ளோமா கற்கைநெறியினை வழங்கிவருகின்றது. இக் கற்கையானது ஒவ்வொரு கிரடிட்டிற்கும் (credit) 15 மணித்தியாலங்கள் வகுப்பறை கற்கை நேரமும் 30 மணித்தியாலங்கள் வெளிக்களப் பயிற்சிக் கற்கை நேரமும் உள்ளடங்கலாக இரு வருடங்கள் கற்கைநெறிக் காலத்தினைக் கொண்டது. மேலும் இது தமிழ்மொழி மூலமான கற்கைநெறியாகும். விஞ்ஞான பீடமானது ஆய்வுகூட தொழில்நுட்பத்தில் டிப்ளோமா கற்கைநெறியினை வழங்கிவருகின்றது. இது 18 மாதகால கற்கைக் காலத்தைக் கொண்ட தமிழ் கற்றும் ஆங்கில மொழி மூலமான கற்கை நெறியாகும்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையமானது 2003 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் மையம், அனைத்துப் பீடங்களிலும் உள்ள உள்வாரி மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பலதரப்பட்ட கற்கைநெறிகளை கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் வழங்கி வருகின்றது. இதற்கு மேலதிகமாக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் கணினி வன்பொருளில் சான்றிதழ் கற்கை நெறியினை பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நடாத்திவருகின்றது. பல்கலைக்கழகமானியங்களின் நெறிமுறைகளின் படி இக் கற்கைநெறியானது SLQF L1 (NVQ L3 ற்கு சமனான) தரத்தை கொண்டுள்ளது.

புறநிலைக் கற்கைகள் அலகு

பிரதேச மக்களின் அதிகரித்து வரும் தேவைகளின் நிமித்தம் 1998 ஆம் ஆண்டு புறநிலைக் கற்கைகள் அலகு நிறுவப்பட்டது. இக் கற்கைகளானது பல்கலைக்கழகத்தினால் தொடங்கப்பட்டு பல்கலைக்கழக மூதவையினால் கலை மற்றும் கலாசார பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பீடமானது இக்கற்கைகளுக்கான அலகினை நிறுவி பின்வரும் கற்கைநெறிகளை முன்னெடுத்து வருகின்றது.

- இதழியலில் சான்றிதழ் கற்கை
- இடர் முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை
- நிறுவன முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை
- உளவியல் மற்றும் ஆளுமை அபிவிருத்தியில் சான்றிதழ் கற்கை
- ஆலோசனை வழிகாட்டலில் சான்றிதழ் கற்கை
- தொடர்பாடலுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கை

ஒவ்வொரு கற்கைநெறியும் 60 மணித்தியாலங்களைக் கொண்ட மூன்று மாத கால கற்கைநெறியாக சிறப்பான ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றது.

புதிய பீடம் மற்றும் கற்கைநெறிகள்

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையானது தற்காலத்திற்கேற்றவாறாக ஆர்வமூட்டும் துறைகளில் புதிய பட்டப் படிப்புக்களை அறிமுகம் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

- ஓர் வேலைத்தளத்திற்கு இசைவான திறமையான பட்டதாரிகளை உருவாக்கும் கொள்கைக்கு இணங்க, ‘தொழில்நுட்ப பீடம்’ ஆனது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையினை முன்மொழிவதன் ஊடாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி மற்றும் பொறியியல் தொழில்நுட்ப இளமாணி (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல்) ஆகியவற்றில் பட்டப்படிப்புகளை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது.

- கலை மற்றும் கலாசார பீடமானது புதிதாக முன்மொழிந்துள்ள இந்துநாகரிக பீடத்தின் ஊடாக இந்துநாகரிக இளமாணி பட்டத்தினையும் மற்றும் புதிதாக முன்மொழிந்துள்ள சட்ட பீடத்தின் ஊடாக சட்ட இளமாணி பட்டத்தினையும் உருவாக்கியுள்ளது. மேலும் கலை மற்றும் கலாசார பீடமானது தமிழ் கற்கைகள், பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல், மற்றும் சமூகவியல் மற்றும் மானுடவியல் ஆகிய புதிய துறைகளை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- வணிக மற்றும் பொருளாதார பீடமானது புதிதாக முன்மொழியப்பட்டுள்ள கணக்கியல் மற்றும் நிதியியல் துறையின் ஊடாக பிரயோகக் கணக்கியல் மற்றும் நிதியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்டத்தினை உருவாக்கியுள்ளது.
- விவசாய பீடமானது ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறையில் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்டத்தினை உருவாக்கியுள்ளது.
- விஞ்ஞான பீடமானது புதிதாக கணினியியல் துறையினை முன்மொழிந்துள்ளது.
- திருகோணமலை வளாகமானது கடல்சார் தொழில்நுட்பம் என்னும் புதிய பீடத்தினை ஸ்தாபிப்பதன் ஊடாக கடல் அறிவியல்/கடல்சார் பொறியியலில் இளமாணி பட்டப்படிப்புக் கற்கைகளை முன்னெடுப்பதற்கான பணியில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் இவ் வளாகமானது புதிதாக சித்த மருத்துவ பீடத்தை நிறுவுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடைவில் வீழ்ச்சியும் காரணங்களும்

- உள்ளக தர உத்தரவாதத்திற்கான நிறுவனமயமாக்கப்பட்ட முயற்சி மற்றும் நவீன போக்குகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை மேம்படுத்துதல்/திருத்தங்கள் என்பவற்றில் குறைவான கவனம் செலுத்தப்பட்டிருந்தது அதாவது விளைவு அடிப்படையிலான கல்வி மற்றும் மாணவர் மையக் கற்றல் (SCL) போன்றவை பழைய நிறுவனத் திட்டம்/செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் பழைய நிறுவனத் திட்டம்/செயல் திட்டத்தில் இல்லை. தற்போது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 7 ஐப்பசி 2019 இல் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை 09/2019 இன் படி, பல்கலைக்கழகமானது பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாதத்திற்கான மையத்தை (CQA) பலப்படுத்தியுள்ளது.

  22 ஆம் திகதி ஆடி மாதம் 2020 அன்று நடைபெற்ற மூதவையின் 316 வது கூட்டத்தின் பரிந்துரையின்படி, பேரவையின் 307 வது கூட்டத்தில் "கற்பித்தலில் சிறந்து விளங்குபவர்களுக்கான விருது திட்டம்" அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் விருதானது பின்வரும் மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. மாணவர்களின் கருத்து – 25%, முன்னாள் மாணவர்கள்/சமீபமாக வெளியேறியவர்கள் – 15%, ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட கோப்புகளின் படி – 25%, சக மதிப்பீடு – 20%, மற்றும் தலைவரின் மதிப்பீடு – 15%.

- உள்ளூர் தேவைகள் மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உயர் தாக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான ஓர் ஒருங்கிணைந்த திட்டம் நடைமுறையில் இல்லை. 30 ஆம் திகதி தை மாதம் 2021 இல் நடைபெற்ற பேரவையின் 312 வது கூட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கான ஓர் விரிவான ஆராய்ச்சிக் கொள்கை ஆவணத்தை செயல்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கிய ஓர் அராய்ச்சி பேரவை உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் ஒரு புதுமையான வெளியீடு அடிப்படையிலான ஆராய்ச்சி நிதியமைப்பு நுட்பமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அதிகமாக மாணவர் அமைதியின்மையை பல்கலைக்கழகம் எதிர்கொண்டுள்ளது. இருப்பினும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது பங்குதாரர்களின் நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- கோவிட் - 19 தொற்றுநோய் பரவல் காரணமாக பல செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மற்றும் நாடு முடக்கப்பட்டு இருந்த காலத்திலும் நிகழ்நிலை தளங்கள் மூலமாக கல்விச் செயற்பாடுகள் தொடரப்பட்டதோடு கல்வி நடவடிக்கைகளில் மாணவர்களின் ஈடுபாட்டை உறுதி செய்துகொண்டது.

எதிர்காலத் திட்டம்

- எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் அனைத்து கல்விச் செயற்பாடுகளையும் மீண்டும் தொடங்குவதன் மூலம் நிலுவையில் உள்ள அனைத்து தேர்வுகள் மற்றும் செயல்முறை அமர்வுகளை நடாத்தி சிறப்பாக செயல்படுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. வருடாந்த மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதன் மூலம் நாடு முழுவதிலும் இருந்து வருகைதரும் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்காக நாங்கள் தயாராகவுள்ளோம்.

- 2022 ஆம் ஆண்டிற்கான முக்கிய எதிர்காலத் திட்டமாக தொழில் மற்றும் சமூக இணைப்புக்கான மையம், பல்துறை ஆராய்ச்சி மையம், சர்வதேச விவகாரப் பிரிவு, மற்றும் சமூக நல்லிணக்க மையம் என நான்கு மையங்கள் நிறுவப்பட உள்ளன. இவ் நான்கு மையங்களை நிறுவுவதன் முக்கிய நோக்கம் மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் தங்களின் கல்வித் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவாகும்.

2021 இன் சிறப்பம்சங்கள்

- 01.01.2021 - இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான உத்தியோகப் பூர்வ வேலை ஆரம்பம்



- 27.01.2021 - ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையின் திறப்புவிழா.

- 27.01.2021 - வணிகத் துறையின் நட்புறவான சுற்றுச்சூழலுடன் கூடிய கற்றல் மையத்தில் மரம் நடுதல்



- 04.03.2021 & 05.03.2021 - கல்விசாரா பணியாளர்களுக்கான பயிற்சிகள்/ENACT திட்டத்தின் மூலம் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஆளுகை, முகாமை மற்றும் சீர்திர்த்தத்தை மேம்படுத்துதல் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் Ersamus+ திட்டத்தின் ஆதரவுடன் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமாகும்.



- 08.03.2021 - ஆங்கில மொழிக் கற்பித்தல் திணைக்களத்தின் தலைவர் மற்றும் ஊழியர்கள் சேர்ந்து சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூரும் வகையில் கலை மற்றும் கலாசார பீடத்தின் மாணவர்களுடன் நிகழ்நிலை தளத்தில் நிகழ்ச்சி ஒன்றை நடாத்தியுள்ளனர்.
- 10.03.2021 - விவசாய பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான 4வது தேசிய கருத்தரங்கு (மெய்நிகர் கருத்தரங்கு) "கணிக்க முடியாத பேரிடர்களை எதிர்கொள்வதற்காக விவசாயத்தில் மாற்றியமைக்கப்பட்ட தொழில்நுட்ப தழுவல்கள்" என்னும் கருப்பொருளில் கீழ் நடைபெற்றது.
- 23.03.2021 - உலக வன தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வனவள திணைக்கழத்தின் உதவியுடன் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையில் மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.
- 06.04.2021 - விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கணிதப் பேராசிரியர். எஸ். திருக்கணேஷ், மற்றும் பௌதிகவியல் பேராசிரியர். எப். சி. றாகல், ஆகியோர் "அறிவியல் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகளை" பெற்றுள்ளனர். European Physical Journal C எனும் ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்ட "Anisotropic generalization of well-known solutions describing relativistic self-gravitating fluid systems: an algorithm" என்ற தலைப்பின் கீழான ஆராய்ச்சிக் கட்டுரைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டதாகும்.




- 26.08.2021 - வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சி அமர்வானது "புதுமையான டிஜிட்டல்மயமாக்கல் மூலம் வாய்ப்புகளை கட்டமைத்தல்" என்ற கருப் பொருளின் கீழ் நடாத்தப்பட்டது.
- 16.10.2021 - விவசாய பீடத்தின் நிலையான விவசாயம் மற்றும் வள முகாமைத்துவ நிலையத்தினால் உலக உணவுத் திட்டம் கொண்டாடப்பட்டது.




- 09.11.2021 & 10.11.2021 - கலை மற்றும் கலாசார பீடத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சி அமர்வானது "கோவிட் இன் நிலையான சவால்கள் உருவாக்கிய ஆக்கப்பூர்வமான சிந்தனைகள்" என்ற கருப் பொருளின் கீழ் நடாத்தப்பட்டது.
- 22.11.2021 - கலை மற்றும் கலாசார பீடத்தில் "பாரதி நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு" ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது.
- 25.11.2021 - இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் AHEAD நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக ELTA-ELSE எனும் பீட ஒதுக்கீட்டு மானியத்தின் கீழ் கல்குடா வலயத்திலுள்ள Dilmah பாதுகாப்பு பண்ணை மற்றும் AmiRON சேதனப் பண்ணை என்பவற்றிற்கு களத்தைப் பார்வையிடும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
- 14.12.2021 - விஞ்ஞான பீடத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த ஆராய்ச்சி அமர்வானது "விஞ்ஞானத்தினால் ஈர்க்கக் கூடிய துறைகளின் மூலம் சமூகத்தை அணுகுதல்" என்ற கருப் பொருளின் கீழ் நடாத்தப்பட்டது.

மனித வளங்களின் விபரங்கள்:



படம் 2.1 : *31 மார்கழி 2021 இல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கல்விகற்கும் மொத்த மாணவர்களிற்கும் மற்றும் மொத்த கல்விசார் ஊழியர்களிற்கு இடையிலான விகிதாசாரப் பரம்பல்*



படம் 2.2 : *31 மார்கழி 2021 இல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் கல்வி கற்கும் மொத்த மாணவர்களிற்கும் மற்றும் மொத்த கல்விசார் ஊழியர்களிற்கு இடையிலான விகிதாசாரப் பரம்பல்*

அட்டவணை 1 : *31 மார்கழி 2021 இல் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் திருகோணமலை வளாகத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் நிரந்தர ஊழியர்களுக்கு இடையிலான பரம்பல்.*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

பீடம்	கற்கைநெறி	மொத்த மாணவர் தொகை	மொத்த கல்விசார் ஊழியர் தொகை	மொத்த கல்விசாரா ஊழியர் தொகை
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான இளமாணி	308	30	32
கலை மற்றும் கலாசாரம்	கலை இளமாணி	2863	68	22
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமாணி	393	25	14
	வர்த்தக இளமாணி	451		
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி	476	38	40
	தாதியியலில் விஞ்ஞான இளமாணி	171		
விஞ்ஞானம்	விஞ்ஞான இளமாணி (உயிரியல், பொது)	304	42	41
	விஞ்ஞான இளமாணி (பௌதீகவியல், பொது)	443		
	விஞ்ஞான இளமாணி (சிறப்புப் பட்டம்)	31		
தொழில்நுட்பம்	விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவு திறனில் தொழில்நுட்ப உயிர் அமைப்பு இளமாணி	396	7	11
நூலகம்		-	5	14
ஏனைய துறைகள்		-	-	208
மொத்தம்		5836	215	382

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்

பீடம்	கற்கைநெறி	மொத்த மாணவர் தொகை	மொத்த கல்விசார் ஊழியர் தொகை	மொத்த கல்விசாரா ஊழியர் தொகை
பிரயோக விஞ்ஞானம்	கணினி விஞ்ஞான இளமாணி	318	17	6
	பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞான இளமாணி	246		
	சித்த மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை இளமாணி	344	10	2
தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள்	முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	617	30	5
	கலை இளமாணி (தொடர்பாடல் கற்கைகள் மற்றும் மொழிகள்)	490		
நூலகம்		-	2	6
ஏனைய துறைகள்		-	-	74
மொத்தம்		2015	59	93



7,851

மொத்த மாணவர்கள்



274

மொத்த கல்வி சார் ஊழியர்கள்




475


மொத்த கல்வி சாரா ஊழியர்கள்

மாணவர் பரம்பல்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் திருகோணமலை வளாகம் என்பவற்றிலுள்ள பீடங்கள் வாரியான மொத்த மாணவர்களின் விகிதாசாரப் பரம்பலினை பின்வரும் படங்கள் 3.1 மற்றும் 3.2 காட்டுகின்றன.



படம் 3.1 : *கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் உள்ள பீடங்கள் வாரியாக மொத்த மாணவர் தொகையின் விகிதாசாரப் பரம்பல்*



படம் 3.2 : *கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் உள்ள பீடங்கள் வாரியாக மொத்த மாணவர் தொகையின் விகிதாசாரப் பரம்பல்*

உள்நாட்டு மாணவர்களின் விபரங்கள்


அட்டவணை 2 : இளமாணி பட்டப்படிப்பிற்காக உள்வாங்கப்பட்ட புதிய உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கைகள்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

பீடம்	கற்கைநெறி	உள்வாங்கப்பட்ட ஆண்டு	அனுமதிக்கப்பட்ட உள்வாங்கல்	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான இளமாணி	2019/20	100	97
கலை மற்றும் கலாசாரம்	கலை இளமாணி	2019/20	600	670
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமாணி	2019/20	100	144
	வர்த்தக இளமாணி	2019/20	125	151
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி	2019/20	80	116
	தாதியியலில் விஞ்ஞான இளமாணி	2019/20	40	43
விஞ்ஞானம்	விஞ்ஞான இளமாணி (உயிரியல், பொது)	2019/20	100	88
	விஞ்ஞான இளமாணி (பௌதீகவியல், பொது)	2019/20	150	128
தொழில்நுட்பம்	விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவு திறனில் தொழில்நுட்ப உயிர் அமைப்பு இளமாணி	2019/20	90	107
மொத்தம்			1385	1544

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்

பீடம்	கற்கைநெறி	உள்வாங்கப்பட்ட ஆண்டு	அனுமதிக்கப்பட்ட உள்வாங்கல்	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை
பிரயோக விஞ்ஞானம்	கணினி விஞ்ஞான இளமாணி	2019/20	100	87
	பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞான இளமாணி	2019/20	80	69
	சித்த மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை இளமாணி	2019/20	75	89
தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள்	முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	2019/20	150	234
	கலை இளமாணி (தொடர்பாடல் கற்கைகள் மற்றும் மொழிகள்)	2019/20	150	181
மொத்தம்			555	660



படம் 4 : *கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் திருகோணமலை வளாகத்தில் புதிதாக உள்வாங்கப்பட்ட மாணவர்களின் பரம்பல்.*

அட்டவணை 3 : *இளமாணி பட்டப்படிப்பிற்காக உள்வாங்கப்பட்ட மொத்த உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கைகள்*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

பீடம்	கற்கைநெறி	கற்கை வருடம்	உள்வாங்கப்பட்ட ஆண்டு	UGC இனால் உள்வாங்கப்பட்ட உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை		
				ஆண்	பெண்	மொத்தம்
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான இளமாணி	1ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2019/2020	16	81	97
		1ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2018/2019	18	47	65
		2ம் வருடம்	2017/2018	9	38	47
		3ம் வருடம்	2016/2017	14	41	55
		4ம் வருடம்	2015/2016	18	26	44
கலை மற்றும் கலாசாரம்	கலை இளமாணி	1ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2019/2020	109	561	670
		1ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2018/2019	108	451	559
		2ம் வருடம்	2017/2018	124	495	619
		3ம் வருடம்	2016/2017	153	545	698
		4ம் வருடம்	2015/2016	54	174	228
	கல்வியியலில் இளமாணி	2ம் வருடம்	2017/2018	6	24	30
		3ம் வருடம்	2016/2017	5	24	29
		4ம் வருடம்	2015/2016	3	27	30
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமாணி	1ம் வருடம்	2019/2020	42	102	144
		2ம் வருடம்	2018/2019	32	57	89
		3ம் வருடம்	2017/2018	28	55	83
		4ம் வருடம்	2016/2017	14	63	77
	வர்த்தக இளமாணி	1ம் வருடம்	2019/2020	58	93	151
		2ம் வருடம்	2018/2019	42	77	119
		3ம் வருடம்	2017/2018	32	59	91
		4ம் வருடம்	2016/2017	20	70	90
விஞ்ஞானம்	விஞ்ஞான இளமாணி (உயிரியல்) பொது	1ம் வருடம்	2019/2020	13	75	88
		2ம் வருடம்	2018/2019	11	65	76
		3ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2017/2018	15	49	64
		3ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2016/2017	20	56	76
	விஞ்ஞான இளமாணி (பௌதீகவியல்) பொது	1ம் வருடம்	2019/2020	63	65	128
		2ம் வருடம்	2018/2019	54	52	106
		3ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2017/2018	53	50	103
		3ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2016/2017	54	52	106
	கொளரவ விஞ்ஞான இளமாணி	4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2015/2016	0	7	7
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2014/2015	1	17	18
		பட்டம் நிலுவையில் உள்ளவர்கள்	2013/2014	2	4	6
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி	1ம் வருடம்	2019/2020	34	82	116
		2ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2018/2019	27	44	71
		2ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2017/2018	30	50	80
		3ம் வருடம்	2016/2017	27	46	73
		4ம் வருடம்	2015/2016	34	43	77
		5ம் வருடம்	2014/2015	31	28	59
	தாதியியலில் விஞ்ஞான இளமாணி	1ம் வருடம்	2019/2020	13	30	43
		2ம் வருடம்	2018/2019	11	25	36
		3ம் வருடம்	2017/2018	11	15	26
		4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2016/2017	7	30	37
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2015/2016	5	24	29
தொழில்நுட்பம்	விவசாய தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவு திறனில் தொழில்நுட்ப உயிர் அமைப்பு இளமாணி	1ம் வருடம்	2019/2020	24	83	107
		2ம் வருடம்	2018/2019	16	62	78
		3ம் வருடம்	2017/2018	17	53	70
		4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2016/2017	19	48	67
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2015/2016	9	65	74
மொத்தம்				1506	4330	5836

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்						
பீடம்	கற்கைநெறி	கற்கை வருடம்	உள்வாங்கப்பட்ட ஆண்டு	UGC இனால் உள்வாங்கப்பட்ட உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை		
				ஆண்	பெண்	மொத்தம்
பிரயோக விஞ்ஞானம்	பிரயோக விஞ்ஞானம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞான இளமாணி	1ம் வருடம்	2019/2020	38	31	69
		2ம் வருடம்	2018/2019	33	21	54
		3ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2017/2018	31	29	60
		3ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2016/2017	29	34	63
	கணினி விஞ்ஞான இளமாணி	1ம் வருடம்	2019/2020	61	26	87
		2ம் வருடம்	2018/2019	70	20	90
		3ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2017/2018	52	25	77
		3ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2016/2017	46	18	64
	சித்த மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சை இளமாணி	1ம் வருடம்	2019/2020	22	67	89
		2ம் வருடம்	2018/2019	13	46	59
		2ம் வருடம் (அணியைத் தவறவிட்டவர்கள்)	2017/2018	0	1	1
		3ம் வருடம்	2017/2018	15	43	58
		4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2016/2017	11	40	51
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2015/2016	3	14	17
		5ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2014/2015	8	21	29
		5ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2013/2014	11	29	40
தொடர்பாடல் மற்றும் வர்த்தகக் கற்கைகள் பிரயோக விஞ்ஞானம்	முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	1ம் வருடம்	2019/2020	46	188	234
		1ம் வருடம் (அணியைத் தவறவிட்டவர்கள்)	2018/2019	0	1	1
		2ம் வருடம்	2018/2019	28	113	141
		3ம் வருடம்	2017/2018	30	97	127
		4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2016/2017	19	43	62
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2015/2016	14	38	52
	கலை இளமாணி (தொடர்பாடல் கற்கைகள் மற்றும் மொழிகள்)	1ம் வருடம்	2019/2020	10	171	181
		1ம் வருடம் (அணியைத் தவறவிட்டவர்கள்)	2018/2019	0	2	2
		2ம் வருடம்	2018/2019	7	131	138
		2ம் வருடம் (அணியைத் தவறவிட்டவர்கள்)	2017/2018	0	1	1
		3ம் வருடம்	2017/2018	10	124	134
		4ம் வருடம் 1ம் அரை ஆண்டு	2016/2017	1	19	20
		4ம் வருடம் 2ம் அரை ஆண்டு	2015/2016	3	11	14
மொத்தம்				611	1404	2015


அட்டவணை 4 : *வெளிவாரி இளமாணி பட்டப்படிப்பிற்காக கட்டணம் பெற்று உள்வாங்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கைகள்*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்				
கற்கைநெறி	கற்கை வருடம்	ஆண்	பெண்	மொத்தம்
பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கை (2021 மார்கழி 31 இல்)				
வணிக முகாமைத்துவ இளமாணி	1ம் வருடம்	0	0	0
	2ம் வருடம்	1	0	1
	3ம் வருடம்	1	0	1
முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	1ம் வருடம்	146	104	250
	2ம் வருடம்	80	70	150
	3ம் வருடம்	88	57	145
மொத்தம்		316	231	547

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்				
கற்கைநெறி	கற்கை வருடம்	ஆண்	பெண்	மொத்தம்
பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கை (2021 மார்கழி 31 இல்)				
முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி	3ம் வருடம்	1	2	3
தொடர்பாடலில் கலை இளமாணி	3ம் வருடம்	3	3	6
மொத்தம்		4	5	9

அட்டவணை 5 : *முதுதத்துவ பட்டப்படிப்பிற்காக உள்வாங்கப்பட்ட புதிய மற்றும் மொத்த உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கைகள்*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்					
பீடம்	கற்கைநெறி	முழு நேரம்/பகுதி நேரம்	ஆண்	பெண்	மொத்தம்
புதிய உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (2021 தை முதல் மார்கழி)					
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான முதுமாணி	முழு நேரம்	9	9	18
கலை மற்றும் கலாசாரம்	கல்வியியலில் முதுமாணி	முழு நேரம்	35	27	62
	கலை முதுமாணி	முழு நேரம்	15	10	25
மொத்தம்			**59**	**46**	**105**
மொத்தமாக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை (2021 மார்கழி 31 இல்)					
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான முதுமாணி	முழு நேரம்	18	17	35
	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் இல் முதுதத்துவமாணி	முழு நேரம்	0	2	2
கலை மற்றும் கலாசாரம்	கல்வியியலில் முதுமாணி	முழு நேரம்	103	75	178
	கலையில் முதுமாணி	முழு நேரம்	36	66	69
	புவியியலில் முதுதத்துவமாணி	முழு நேரம்	1	0	1
	நுண்கலையில் முதுதத்துவமாணி	முழு நேரம்	2	1	3
	நாடகம் மற்றும் அரங்கியலில் முதுதத்துவமாணி	முழு நேரம்	2	4	6
	தமிழில் முதுதத்துவமாணி	முழு நேரம்	0	1	1
	தமிழில் தத்துவமாணி	முழு நேரம்	1	0	1
	நுண்கலையில் தத்துவமாணி	முழு நேரம்	1	0	1
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம்	பொருளாதார அபிவிருத்தியில் முதுமாணி	முழு நேரம்	20	8	28
	வியாபார நிர்வாகத்தில் முதுமாணி	முழு நேரம்	11	5	16
	பொருளாதாரத்தில் முதுதத்துவமாணி	முழு நேரம்	1	3	4
விஞ்ஞானம்	விஞ்ஞான கல்வியியலில் முதுமாணி	முழு நேரம்	5	8	13
	முதுதத்துவமாணி	முழு நேரம்	0	1	1
	தத்துவமாணி	முழு நேரம்	1	2	3
மொத்தம்			**202**	**193**	**362**



படம் 5 : *கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் மற்றும் திருகோணமலை வளாகத்தின் சகல பீடங்களிலும் உள்ள மொத்த மாணவர்களின் பரம்பல்.*

வெளிநாட்டு மாணவர்களின் விபரங்கள்

அட்டவணை 6 : இளமாணி பட்டப்படிப்பிற்காக 2021 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கைகள்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்							
பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	நாடு	உள்வாங்கப்பட்ட ஆண்டு	மாணவர்கள் உள்வாங்கல்கள் (பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை)		
					ஆண்	பெண்	மொத்தம்
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி	4ம் வருடம்	நியூசிலாந்து	2014/2015	0	1	1
			ஆஸ்திரேலியா		0	1	1
			சவுதி அரேபியா		0	1	1
		3ம் வருடம்	சவுதி அரேபியா	2014/2015	0	1	1
		2ம் வருடம்	கனடா	2017/2018	0	1	1
		1ம் வருடம்	சவுதி அரேபியா	2019/2020	0	1	1
			கத்தார்		1	1	2
மொத்தம்					1	7	8

பட்டதாரிகளின் விபரங்கள்

அட்டவணை 7 : *இளமாணி பட்டதாரிகளின் வெளியீடு : உள்வாரி மாணவர்கள்*

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வளாகம்			
பீடம்	கற்கைநெறி	பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள்	பட்டம் பெற்ற மொத்த மாணவர்கள்
கலை மற்றும் கலாசாரம்	கலை இளமாணி (பொது)	78	55
	கலை இளமாணி (சிறப்பு)	115	104
	கல்வியியல் இளமாணி	46	30
விவசாயம்	விவசாயத்தில் விஞ்ஞான இளமாணி	2	2
வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமாணி	77	56
	மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவ இளமாணி	11	11
	வணிக முகாமைத்துவ இளமாணி	63	55
	கணக்கியல் மற்றும் நிதியியலில் கௌரவ வர்த்தக இளமாணி	28	25
	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவ இளமாணி	5	5
விஞ்ஞானம்	விஞ்ஞான இளமாணி பொது)	245	115
	விஞ்ஞான இளமாணி சிறப்பு)	21	21
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி	87	64
	தாதியியலில் விஞ்ஞான இளமாணி	29	28
மொத்தம்		807	571


இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்			
பீடம்	கற்கைநெறி	பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள்	பட்டம் பெற்ற மொத்த மாணவர்கள்
தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள்	முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (பொது)	70	12
	கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	27	25
	தொடர்பாடலில் கலை இளமாணி (பொது)	3	3
	மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	7	7
	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி	6	5
	தொடர்பாடலில் கலை இளமாணி (பொது)	56	52
	தொடர்பாடலில் கலை இளமாணி (சிறப்பு)	7	7
	மொழியியலில் கலை இளமாணி (பொது)	20	19
	மொழியியலில் கலை இளமாணி (சிறப்பு)	2	2
பல்கலைக்கழகத்தினால் குறித்த காலப்பகுதியில் இடம்பெறுகின்ற திட்டங்களை மேற்கொள்வதற்கான செலவுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் செலவுகளினை நிதி செயலாற்றுகைக் கூற்றில் அங்கீகரித்து வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் ஏனைய செலவுகளான நிலைய நிர்வாகச் செலவு, பல்கலைக்கழகத்தினை நடாத்துவதற்கான செலவு மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவைகள் எதிர்பார்த்த வினைத்திறனில் இயங்குவதற்கான பராமரிப்பு மற்றும் மறுசீரமைப்பு செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்கில் கொள்ளப்படுவதுடன் நிதி செயலாற்றுகைக் கூற்றில் வெளிப்படுத்தகப்படுகின்றது.

2.6.5. நிதிச் செலவுகள்

நிதிச் செலவுகள் ஆவன அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற (அங்கீகரிக்கப்படுகின்ற) அதேவேளை செலுத்தப்படாத செலவுகள் பொறுப்பாக மாற்றப்படுகின்றது அல்லது காட்டப்படுகின்றது.

2.7. காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது இலங்கை அரச பகுதிகளிற்கான கணக்கீட்டு நியமம் - 02 (SLPSAS - 02) அடிப்படையில் தயாரிக்கின்ற அதேவேளை பணப்பாய்ச்சல் கூற்றானது நேர் முறையில் தயாரிக்கப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்படும் மூலதன மானியமானது நிதி பணப் பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2.8. நிதிக்கூற்று அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக்கூற்று அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னர் ஏதாவது பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவசியமான, பொருத்தமான செம்மையாக்கல்கள் அல்லது சீராக்கத்தினை கணக்குகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.9. ஏனைய வெளிப்படுத்தல்கள்

2.9.1. கல்விக் கொடுப்பனவு மற்றும் மகாபோல போன்றவற்றிற்கான மானியம்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 14ம் திகதி ஐப்பசி மாதம் 1987ம் ஆண்டு (14.10.1987) திகதியிடப்பட்ட UGC/F/BUR/87 இலக்க சுற்று நிருபத்தின் அடிப்படையில் கல்விக் கொடுப்பனவிற்கான மானியமானது வருமானமாக மீண்டெழும் மானியத்தின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்ற அதேவேளை கல்விக் கொடுப்பனவினை செலுத்துவது (வழங்குவது) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் (4.3.7.1705) நெறிப்படுத்தப்பட்டது போல் செலவாக வெளிப்படுத்தப்படுகின்றது. நிதி செயலாற்றுகைக் கூற்றில் வேறு வகையில் மாணவர்களுக்கான நிதி உதவித் தொகை அடிப்படையில் காட்டப்படுகின்றது.

2.9.2. உயர் கல்விற்கான இருபதாம் நூற்றாண்டிற்கான (20ம்) நிகழ்சித் திட்டம் (HETC)

உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட (HETC) நிகழ்சித் திட்டத்தை PPDU மூலம் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வந்துள்ளது. இதற்காக வேறான வங்கிக் கணக்கு பராமரிக்கப்பட்டு வருவதுடன் வங்கிக் கணக்குக் கூற்றும் தகுந்த கால இடைவெளியில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்சித் திட்டம் முழுமையாக முடிவடைந்ததன் பின்னர், இந்த நிகழ்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் பல்கலைக்கழகத்திற்குரிய சொத்துக்களாகவே கணக்கில் கொள்ளப்படுகின்றது.

5 ஆண்டுகளின் முக்கிய புள்ளிவிபரங்கள்

வகைகள்		2017	2018	2019	2020	2021	% மாற்றம் 2017-2021	% மாற்றம் 2020-2021
மாணவர் எண்ணிக்கை	மொத்தம்	*4659*	*5299*	*6186*	*7326*	*7851*	40.7%	6.7%
	விவசாயம்	299	275	250	262	308	2.9%	14.9%
	கலை மற்றும் கலாசாரம்	1812	2305	2828	3149	2863	36.7%	-10.0%
	வணிகம் மற்றும் முகாமைத்துவம்	682	681	682	730	844	19.2%	13.5%
	சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	427	511	522	686	778	45.1%	11.8%
	விஞ்ஞானம்	543	481	510	544	647	16.1%	15.9%
	தொழில்நுட்பம்	86	144	221	289	396	78.3%	27.0%
	பிரயோக விஞ்ஞானம்	126	217	320	465	564	77.7%	17.6%
	சித்த வைத்திய அலகு	139	181	216	278	344	59.6%	19.2%
	தொடர்பாடல் மற்றும் வியாபாரக் கற்கைகள்	545	504	637	923	1107	50.8%	16.6%
ஊழியர் எண்ணிக்கை	மொத்தம்	*699*	*729*	*676*	*718*	*749*	6.7%	4.1%
	கல்விசார் ஊழியர்	230	244	205	262	274	16.1%	4.4%
	உதவி கல்விசார் ஊழியர்	19	24	26	26	26	26.9%	0.0%
	நிர்வாக ஊழியர்	30	39	41	39	41	26.8%	4.9%
	கல்விசாரா ஊழியர்	420	422	404	391	408	-2.9%	4.2%
கல்விசார் ஊழியர்கள்	மொத்தம்	*223*	*237*	*246*	*255*	*267*	16.5%	4.5%
	சிரேஸ்ட பேராசிரியர்	-	2	3	2	2	-	0.0%
	பேராசிரியர்	9	8	7	10	15	40.0%	33.3%
	இணைப் பேராசிரியர்	-	-	-	1	3	-	66.7%
	சிரேஸ்ட விரிவுரையாளர் Gr I	57	61	69	78	81	29.6%	3.7%
	சிரேஸ்ட விரிவுரையாளர் Gr II	71	85	80	78	67	-6.0%	-16.4%
	விரிவுரையாளர்	86	81	87	86	99	13.1%	13.1%
இளங்கலைப் பட்டதாரிகள்	மொத்தம்	*5146*	*5711*	*6652*	*8083*	*8407*	38.8%	3.9%
	உள்வாரி	4659	5299	6176	7326	7851	40.7%	6.7%
	வெளிவாரி	487	412	476	757	556	12.4%	-36.2%
முதுமாணி பட்டதாரிகள்	மொத்தம்	192	186	227	266	362	47.0%	26.5%
ஆய்வு வெளியீடுகள்	அறிவியல் வலை	15	15	24	73	166	91.0%	56.0%
	புத்தகம்/புத்தக அத்தியாயம்	22	30	18	12	14	-57.1%	14.3%
விருதுகள்	ஜனாதிபதி விருது	4	2	3	2	-	-	-
கையொப்பமிடப்பட்ட MOU	மொத்தம்	2	1	1	-	-	-	-

கணக்காய்வுக் குழுத் தலைவரின் 2021 ஆம் ஆண்டிற்கான அறிக்கை

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை பேரவையின் கீழ் இயங்கிவரும் குழுக்களில் கணக்காய்வுக் குழுவும் ஒன்றாகும். ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் கூடுவதோடு பல்கலைக்கழகத்தின் நிதி, நிர்வாகம், மனித சொத்துக்கள் மற்றும் கல்வி நிர்வாகம் என்பவை பற்றி விவாதிக்கின்றது. இதன் உறுப்பினர் தகுதி, அலுவலக நிபந்தனைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் பேரவை ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் திறைசேரியால் நிர்வகிக்கப்படுகிறது.

1. கணக்காய்வு குழுவின் குறிப்பு நிபந்தனைகள்:

i. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை ஆய்வு செய்தல்.

ii. பல்கலைக்கழகத்தின் சகல நடவடிக்கைகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

iii. உள்ளகக் கணக்காய்வாளரினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் வேலைத் திட்டத்தை முற்பார்வை மற்றும் பரிந்துரை செய்தல்.

iv. செலவு செயல்திறனை தொடர்ச்சியான இடைவெளியில் செயல்திறன் மதிப்பாய்வு செய்தல் மற்றும் வீணான செலவுகளை அகற்றுதல்.

v. வெளிப்புறக் கணக்காய்வாளர்களுடன் தொடர்பு கொள்வதோடு கணக்காளர் நாயகத்தின் அல்லது வெளிப்புற கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்களைப் பின்பற்றுதல்.

vi. சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்.

vii. கணக்கியல் தரநிலைகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்த நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

viii. உள்ளகக் கணக்காய்வு அல்லது வெளிப்புறக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவக் கடிதங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்தல்.

ix. பொது நிறுவன செயற்குழுக்களின் வழங்கப்படும் பரிந்துரைகள்/ வழிகாட்டுதல்களை செயற்படுத்துவதை மதிப்பாய்வு செய்தல்.

x. வருடாந்த அறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்காக குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்களிற்கான அறிக்கையை தயாரித்தல்.

2. கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள்

பின்வரும் குழு உறுப்பினர்கள் தமது பணிகளை குறித்த காலப்பகுதியில் வழங்கியிருந்தனர்.

உறுப்பினரின் பெயர்	பதவி மற்றும் தகுதி
(அ). பேரவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்	
1. திரு. பி. பிறேம்நாத் (தலைவர்)	வழக்கறிஞர்
2. வைத்தியக் கலாநிதி. ஜி. சுகுணன் (உறுப்பினர்)	பிராந்திய இயக்குனர், சுகாதார சேவைகள் கல்முனை.
3. திருமதி. எஸ். ஜே. எம். எஸ். சமரகோண்	பீடாதிபதி, மகாவலி தேசிய கல்வியியல் கல்லூரி
(ஆ). முன்னாள் அலுவலக உறுப்பினர்கள்	
4. திரு. ஏ. பகிரதன்	பதில் பதிவாளர்
5. திரு. எஸ். திருவருட்செல்வன்	சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்
(இ). பார்வையாளர்கள்	
6. திரு. எம். எச். எம். அர்.்பத்	தணிக்கை கண்காணிப்பாளர், தேசிய கணக்காய்வு அலுவலகம், மட்டக்களப்பு.
7. திரு. எம் எம் ஜே ஆர் பொகமுவ	உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
(ஈ). அழைப்பாளர்கள்	
8. திரு. எம். எம். பரீஸ்	நிதியாளர்/கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

3. கூட்டங்கள்

நாட்டில் நிலவிய கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் குழு மூன்று தடவைகள் மட்டுமே கூடியுள்ளது. இக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், அனுமதிக்காகவும் மற்றும் மேலதிக தேவையான நடவடிக்கைகளுக்காகவும் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு வழங்கி வைக்கப்பட்டது. இவ் ஆண்டு நடைபெற்ற கூட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு;

கூட்ட இலக்கம்	திகதி
1. 68வது கணக்காய்வுக் குழுக் கூட்டம்	25.02.2021
2. 69வது கணக்காய்வுக் குழுக் கூட்டம்	30.11.2021
3. சிறப்புக் கூட்டம்	14.12.2021

4. 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள்:

இவ் ஆண்டு மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட குழுவின் நடவடிக்கைகள் பின்வருமாறு.

அ. உள்ளகக் கணக்காய்வு:

- உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தை சிபாரிசு செய்தல் மற்றும் கண்காணித்தல்

  முந்தைய அனுபவத்தின் படி, கணக்காய்வு திட்டங்களில் பின்வரும் சில சோதனைப் பகுதிகளில் அதிக கவனத்தைச் செலுத்த குழு பரிந்துரைத்திருந்தது.

  - சொத்துக்களின் பயன்பாடு
  - தேர்வுகளின் முடிவு தாமதம்
  - பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்களை மீறுதல்
  - வாகனப் பழுதுகளைப் பராமரித்தல்
  - வருடாந்த சரிபார்ப்பு மற்றும் நிலையான சொத்துக்கள்
  - தனிப்பட்ட கோப்புக்களை பராமரித்தல்

  மேலும், இந்த ஆண்டு முழுவதும் குழு அதன் நிலையைக் கண்காணித்தது.

- உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.

  இக் குழு உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கைகள், குறிப்புக்கள் மற்றும் வினவல்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்ததுடன் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிர்வாகத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகளையும் வழங்கியிருந்தது.

ஆ. வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்:

குழுவானது குறித்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினைத் தயாரித்தலில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துதல் தொடர்பாக பரிசீலனை செய்தது மற்றும் சரியான நேரத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பிலும் உறுதிப்படுத்தியது. மேலும், பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்கறிக்கை தயாரித்தல் தொடர்பிலும் தொடர்ந்து பரிசீலனை மேற்கொண்டது.

இ. வெளிப்புற கணக்காய்வு:

கணக்காய்வு வினவைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்க வெளிப்புற கணக்காய்வாளர்களினால் ஆண்டு முழுவதும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அறிக்கை என்பவற்றை குழு மதிப்பாய்வு செய்தது.

ஈ. உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு:

- *வருடாந்த சரிபார்ப்பு மற்றும் நிலையான சொத்து பதிவு*

  பல்கலைக்கழகத்தின் வருடாந்த சபை ஆய்வினை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதிலுள்ள முன்னேற்றத்தை குழுவானது தொடர்ச்சியாக மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பு செய்தது. மேலும், நிலையான சொத்துக்களைக் கையாள்வதற்கான மென்பொருளினை பூர்த்தி செய்தல் தொடர்பில் கண்காணித்ததோடு தேவையான வழிவகைகளையும் வழங்கியது.

- *தீர்க்கப்படாத முற்கொடுப்பனவுகள் மற்றும் கடன்களை திருப்பியடைத்தல்*

  கடன் மற்றும் முற்கொடுப்பனவுகளை திருப்பிச் செலுத்தும் செயல்முறை தொடர்பில் குழுவானது முக்கிய கவனம் செலுத்தியிருந்தது மேலும் மதிப்பீட்டு ஆண்டு முழுவதும் திருப்பிச் செலுத்தும் நடவடிக்கைகளை மிக நெருக்கமாகக் கண்காணித்தது.

- *ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான பண வழங்கீடு*

  இந்தக் குழு மேற்கூறியவற்றை வலியுறுத்தியதுடன், ஆராய்ச்சி மானியத்தைப் பெற்றுக் கொண்ட ஊழியர்களின் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் முன்னேற்றத்தையும் கண்காணித்தது

- *தனிப்பட்ட கோப்புகளைப் பராமரிப்பதில் குறைபாடுகள்*

  ஸ்தாபனப் பிரிவுகளினால் தனிப்பட்ட கோப்புகளைப் பராமரிப்பதில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எமது குழு அறிவுறுத்தியது. மேலும் ஊழியர் அபிவிருத்தி மையத்தின் ஊடாக ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துமாறு குழு பரிந்துரை செய்தது.

- *பிரதான களஞ்சியத்தில் இருப்பு சரிபார்ப்பு*

  கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையின் பிரதான களஞ்சியத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு மிகவும் மோசமாக இருப்பதாகவும், பல செயல்பாட்டு குறைபாடுகள் காணப்படுவதாகவும் குழு குறிப்பிட்டது. களஞ்சியப்படுத்தலில் உள்ள குறைபாடுகளை தீர்த்து சரி செய்வதற்காக ஓர் குழுவை நியமிக்குமாறு எமது குழு பரிந்துரை செய்தது.

உ. பெருநிறுவனத் திட்டம் மற்றும் பெருந்திட்டம்

பெருநிறுவனத் திட்டம்

நல்ல நிர்வாகத்தின் பொது நிறுவன வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்ட தரநிலைப்படி, பெருநிறுவனத் திட்டத்தை தயாரிப்பதற்கான முன்னேற்றத்தை தொடர்ந்து குழு ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது.

ஊ. ஒப்பந்தப் பத்திரம் மற்றும் உடன்படிக்கை உடைப்பு

பிணை மீட்பு மறுஆய்வுக் குழுவை எமது குழுவானது தொடர்ந்து மதிப்பாய்வு செய்து கண்காணித்து வந்தது. மேலும் இந்த விடயத்தை கையாள சட்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் விளைவாக பிணைகளை மீறும் சிலரிடம் இருந்து சாதகமான பதில்கள் பெறப்பட்டன. சட்ட ஆலோசகர் மூலமாக கோரிக்கைக் கடிதத்தை பிணையம் வைத்தவருக்கு அனுப்ப சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன.

எ. வரவு செலவு திட்டத்தின் கட்டுப்பாடு

சரியான நிதி கட்டுப்பாடு மற்றும் அதன் ஒதுக்கீடு ஆகியவற்றை உறுதி செய்ய உண்மையான செயல்திறனிற்கு எதிராக வரவுசெலவுத் திட்ட முன்னேற்பாட்டினை குழுவானது கவனமாக உற்றுநோக்கி கண்காணித்தது.

5. முடிவுரை:

கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் செயல்திறனான பங்களிப்பு மற்றும் பல்கலைக்கழகத்தின் நல்லாட்சி நோக்கிய அவர்களின் அர்ப்பணிப்பு என்பவற்றில் குழு திருப்தி அடைந்தது. குழுவின் செயலாளராக தனது பங்கினை நிறைவேற்றுவதில் சிரேஸ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்பாடுகளில் குழு திருப்தி அடைந்துள்ளது. குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையப்பட்ட முன்னேற்றங்களில் குழு திருப்தியடைந்துள்ளதோடு நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, சரியான நிதியியல், நிர்வாக மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றை செயல்படுத்துவதை தொடர்ந்தும் வலியுறுத்துகிறது.

தலைவர்,
கணக்காய்வு குழு
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
18.03.2022

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையினால் நடைமுறைப்படுத்தப்படும் பேண்தகு அபிவிருத்தித் திட்டங்கள்

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தைக் குறைப்பதற்கும் சுற்றாடல் மற்றும் அனர்த்த தாக்க மதிப்பீட்டு பகுப்பாய்வு தொடர்பான பின்வரும் பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளை கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அனைவருக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விலையிலும், நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகலை உறுதி செய்தல்:	• மூதவை கட்டிடத்தில் சூரியகல சக்தி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது (இதற்கான செலவு ஆறு ஆண்டுகளில் ஈடுசெய்யப்படும்). இது 2018 ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் மின்சாரத்தை உருவாக்குகிறது (மொத்த உற்பத்தி அலகுகள் 212,000). இது மூதவைக் கட்டிடத் தொகுதியின் நுகர்வில் 50% நுகர்வையும் மொத்த நுகர்வில் 10% நுகர்வையும் ஈடுகட்டுகிறது. • தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையம் மற்றும் மாணவர்கள் விடுதி என்பவற்றில் சூரியகல அமைப்பினை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மொத்த நுகர்வில் 50% ற்கும் அதிகமான நுகர்வை உள்ளடக்கும்.
கழிவு முகாமைத்துவ அமைப்பை அறிமுகம் செய்தல் மற்றும் செயல்படுத்துதல்:	• பிளாஸ்டிக், பொலித்தீன், கரிமக் கழிவுகள், காகிதம், கண்ணாடிகள் மற்றும் மின்-கழிவுகள் என குப்பைகளை தரம் பிரித்து தனித்தனி கொள்கலன்களில் சேகரிக்கலாம். முதலில் இம் முறையானது விடுதிகளிலும் பின்னர் மற்ற அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.
இரசாயன மற்றும் மருத்துவக் கழிவுகளை சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் அகற்றுவதை உறுதி செய்தல்:	• அபாயகரமான இரசாயனங்கள் மற்றும் மருத்துவக் கழிவுகள் விஞ்ஞான பீடம் மற்றும் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தில் இருந்து பிரதானமாக உருவாக்கப்படுகின்றன. இக் கழிவுகளை அகற்ற ஆரோக்கியமான சுற்றுச் சூழல் வழிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.
பல்கலைக்கழக வளாகத்தில் குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்கான முறைகளை ஆராய்தல்:	• பல்கலைக்கழக வளாகத்தில் போதுமான இடவசதி இருப்பதால் குப்பைகளை மறுசுழற்சி செய்யமுடியும். உயிர்க் கழிவுகளை எரித்து / கிருமி நீக்கம் செய்து பண்ணைக்கு உரமாகப் பயன்படுத்தலாம். காகிதங்கள், உணவுகள் போன்ற பிற சேதனக் கழிவுகள் காற்றில்லா செரிமாணத்திற்கு உட்படுத்தலாம். மேலும் உற்பத்தி செய்யப்படும் உயிர்வாயுவை ஆற்றல் மூலமாகப் பயன்படுத்தலாம். • விவசாய பீடம், விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் நிபுணத்துவ உதவியுடன் இதனைக் கண்காணிக்க முடியும். இதற்கு மட்டக்களப்பு மாநகர சபையின் ஒத்துழைப்பும் ஆதரவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
பல்கலைக்கழகத்தில் உருவாகும் மின்-கழிவுகளைக் குறைப்பதற்கான உரிய அளவீடுகளை செயல்படுத்தல்:	• ஆண்டுதோறும் கணிசமான அளவு வெளியேற்றப்படும் மின்-கழிவுகள் பல்கலைக்கழகத்தில் இருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கழிவுகளைக் குறைக்க நடைமுறைப்படுத்தக் கூடிய அளவீகள் விவாத நிலையில் உள்ளன.
சுத்தம் மற்றும் பசுமை என்னும் கருப்பொருட்களை பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்தல்:	• பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறங்களிலும் கட்டிடங்களுக்கு உள்ளும், பிரதானமாக விடுதிகளில் தூய்மையைப் பேணுவதை மேம்படுத்தவும் அளவீடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பல்கலைக்கழகத்தில் ஓர் அமைப்பை நிறுவுவதன் மூலம் பல்கலைக்கழக வளாகத்தின் பசுமையை தொடர்ந்து பாராமரிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.
விடுதிகள் மற்றும் பிற தேவையான இடங்களில் தீயை அணைக்கும் கருவிகளை நிறுவுதல்:	• தற்போது மூதவை கட்டிடம், நூலகம் மற்றும் பீடங்களில் தீ அணைக்கும் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. தீ விபத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க விடுதிகளில் தீயணைப்புக் கருவிகள் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
LED ஒளியூட்டும் அமைப்பைப் பயன்படுத்தி சிறப்பான ஆற்றல் நுகர்வை உறுதி செய்தல்:	• LED என்பது அதிக ஆற்றல் திறனுள்ள / ஆற்றல் சேமிப்பு ஒளியூட்டும் தொழில்நுட்பமாகும். மேலும் இது நீண்ட காலம் நீடித்தும் மற்றும் நிலைத்து நிக்கக் கூடியதுமாகும். கிட்டத்தட்ட 90% ஆன விளக்குகள் இப்போது LED விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் முழுப் பல்கலைக்கழக அமைப்பும் விரைவில் LED விளக்குகளாக மாற்றப்பட உள்ளன.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2021 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்து 1978 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (“பல்கலைக்கழகம்”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியான அபிப்பிராய கருத்தின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து வருமானங்களும் மிகை அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் போது ரூபா24,700,208 குறுங்கால முதலீட்டிலிருந்தான வட்டி வருமானமானது வருமானமாக இனங்காணப்படாமல் கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திற்கு (restricted fund) செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிதியம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒத்த தன்மை அல்லது செயற்பாடுகளிலான சொத்துக்கள் தொகுக்கப்படாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 105,634,056 கிரயமான ஏனைய சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது.

இ) நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 609,026,512 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மேற்படி மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஈ) 1986 முதல் 2017 வரையிலான காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட மூலதன மானியங்கள் காலக்கழிவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 முதல் 2021 வரையான காலப்பகுதியில் திறைசேரியிடமிருந்து நடைமுறையல்லாத சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 1,087,500,000 மூலதன மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

உ) விளையாட்டுப் பொருட்களின் பெறுமானத்தேய்வுக் கொள்கை இனங் காணப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழகத்தின் பிரதான நிலையம் மற்றும் திருகோணமலை வளாகத்தில் உள்ள விளையாட்டுப் பொருட்கள் முறையே 10 சதவீதமும், 20 சதவீதமும் பெறுமானத்தேய்விடப்பட்டுள்ளன. ஆகையால் ரூபா 16,159,548 தொகையான விளையாட்டுப் பொருட்களின் திரண்ட பெறுமானத்தேய்வின் சரியான தன்மையை திருப்திகரமாக சரிபார்க்க முடியவில்லை.

ஊ) பல்கலைக்கழகத்தின் 15 இடங்களில் உள்ள ஏறத்தாழ 241.2 ஹெக்டெயர் காணி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

எ) 2019 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் (AHEAD) செயற்திட்டத்தால் ரூபா 23,055,912 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்களின் 275 உருப்படிகள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

ஏ) 2008 இல் ரூபா 3,666,316 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நோயியல் ஆய்வுகூடம் 2021 திசெம்பர் 31 அளவில் ரூபா 2,566,312 இற்கு பதிலாக ரூபா 280,116 ஆல் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, திரண்ட பெறுமானத்தேய்வு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,286,196 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஐ) தற்போது பல்கலைக்கழகத்தில் சேவையாற்றுகின்ற 09 விரிவுரையாளர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 34,042,950 கூட்டுத்தொகையான பிணைமுறி மீறல்கள் பெறவேண்டியவையாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நடைமுறை சொத்துக்கள் மற்றும் பிணைமுறி பொறுப்பு ஒதுக்கம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தன.

ஒ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட பணிக்கொடை தொகையான ரூபா 23,334,060 பணிக்கொடை ஒதுக்கீட்டுக்கணக்கில் பற்று வைப்பதற்குப் பதிலாக பணிக்கொடை கெலவினக்கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் பணிக்கொடை ஒதுக்கீட்டுக்கணக்கு ஆகியவை நிதிக்கூற்றுக்களில் இதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

ஓ) ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவுக்கான மூன்று மாடி கட்டிடத் தொகுதி ரூபா 224,269,514 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டு 2020 ஆகஸ்ட் 27 இல் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை என்பன முறையே ரூபா 14,913,923 மற்றும் ரூபா 11,213,476 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஔ) 03 வங்கிக் கணக்குகளில் நேரடிப் பற்றுக்களான மொத்தம் ரூபா 4,060,132 செலவாக அடையாளம் காணப்படாமல் வங்கிகக் கணக்கிணக்க கூற்றுகளில் 12 ஆண்டுகளாக அடையாளம் காணப்படாத பற்றுகளாக காட்டப்பட்டுள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2021 ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிற தகவல்கள்

பிற தகவல்களாக இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளவை பல்கலைக்கழகத்தின் 2021 ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் எனது கணக்காய்வாளர் அறிக்கையின் தேதிக்கு முன்னர் நான் பெற்ற நிதிக்கூற்றுகள் மற்றும் எனது கணக்காய்வாளர் அறிக்கை ஆகியவை அதில் சேர்க்கப்படவில்லை. மற்ற தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகள் பற்றிய எனது கருத்து பிற தகவல்களை உள்ளடக்காததுடன் அவைதொடர்பில் நான் எந்த விதமான உறுதியான முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுகளின் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் படித்து அவ்வாறு செய்யும்போது, ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுகளின் அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவு அல்லது பொருள்கோடல் வேறுவிதமாகத் காணப்படுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வது எனது பொறுப்பாகும்.

புல்கலைக்கழகத்தன் 2021 ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை நான் வாசித்தபோது, இந்த கணக்காய்வாளரின் அறிக்கை தேதிக்கு முன்னர் நான் பெற்ற ஏனைய தகவலின் அடிப்படையில் எனது செயலாற்றலில் இந்த ஏனைய தகவலில் தவறான பொருள்கோடல் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த உண்மையை அரகியலமைப்பின் பந்தி 154(6) ன் படி நான் பாராளுமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டியிருக்கும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரே நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாக உள்ளனர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும்

பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் 3 பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் பின்வரும் பின்வரும் தேவைப்பாடுகள் வெளிப்படுத்துகின்றது.

2.1.1 முனைப்பழியான அபிப்பிராயத்தின் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர, தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் கனக்காயவுக்காக பெற்றுள்ளதுடன் எனது பரீட்சிப்பில் இருந்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(அ) இன் படி சரியான கணக்கியல் பதிவுகள் பல்கலைக்கழகத்தால் வைக்கப்பட்டுள்ளது என்பதும்.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இன் தேவைபாட்டின்படி சமர்ப்பிக்கபட்ட நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன என்பதும்.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iv)இன் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கபட்ட நிதிநிலை அறிக்கைகளில் முந்தைய ஆண்டு நான் செய்த அனைத்து பரிந்துரைகளும் முனைப்பழியான அபிப்பிராயத்தின் பந்தி 1.2(அ), (ஆ), (இ), (ஊ) மற்றும் (ஐ) ல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதும்.

2.2 நிகழ்த்தப்பட்ட நடைமுறை மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருள் சார்ந்த விஷடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது, எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஈ) இன் தேவைக்கேற்ப பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகாரசபையின் எந்தவொரு உறுப்பினருக்கும் பல்கலைக்கழகத்தால் உள்ளிடப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடி அல்லது மறைமுகமாக ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாரா என்பதும்

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (உ) இன் தேவைக்கேற்ப இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்தது என்பது தவிர:

தொடர்பான சட்டம் /அறிவுறுத்தல்	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதி ப் பிரமாணம் 571.	03 முதல் 06 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்ட ரூபா 9,091,397 தொகையான 19 நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை	
(i) ஆம் அத்தியாயத்தின் 20.8 ஆம் உப பிரிவு மற்றும் VI ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் உப பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்கம்	2020 ஆகஸ்ட் 29 இல் தாவரவியல் துறையின் தரம் I சிரேஸ்ட விரிவுரையாளரின் பதவி விலகலை பேரவை ஏற்றுக்கொண்டிருந்தது. பின்னர் அவ் விரிவுரையாளர் 2020 செப்தெம்பர் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் முன்னைய பதவிக்கு மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டிருந்தார். எனினும், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளிற்கு முரணாக ஆரம்ப சம்பளமான ரூபா 91,310 இல் வைப்பதற்கு பதிலாக சம்பள படிநிலை ரூபா 119,520 ஆக வைக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 செப்தெம்பர் 03 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் ரூபா 1,375,407 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது.
(ii) III ஆம் அத்தியாயத்தின் 26.7.2 ஆம் உப பிரிவு	ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து வருகை தரும் விரிவுரையாளர்களை. பணிக்கமர்த்தும்போது பத்திரிகைகளில் வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டிய போதிலும் உப பிரிவிற்கு முரணாக குறிப்பிட்ட பீடம் அல்லது துறையிலுள்ள தலைவர்கள் அல்லது பீடாதிபதிகளின் கருத்தில் கொள்ளலுடன் மாத்திரம் வருகை தரும் விரிவுரையாளர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.
(iii) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உப பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க UGC இன் சுற்றறிக்கை கடிதம்	அனைத்து பதவியணியினரும் கைவிரல் அடையாளமிடல் இயந்திரம் மூலம் தமது வருகையை நிரூபிக்க வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் அந்தத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை.
(iv) XXVI ஆம் அத்தியாயத்தின் 2.6 ஆம் உப பிரிவு மற்றும் தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/எல்டி/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி.	ரூபா 128,861,691 கிரயமான நூலக புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் தொடர்பான இருப்பு மெய்மையாய்வு ஆரம்பத்திலிருந்து நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(v) UGC இன் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு	மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கையானது 2022 மார்ச் 17 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கை 2022யூலை 18 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் அது தொடர்பாக பயன்படுத்த முடியாதவற்றை அகற்றுதல் தொடர்பான நடவடிக்கை 2022 யூலை 18 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
2014 ஒக்டோபர் 21 ஆம் திகதிய பல்கலைக்கழக சேவை மேன்முறையீட்டு சபையின் கட்டளை மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரலின் 2014 திசெம்பர் 09 ஆம் திகதிய CA/201/2014/EUSL ஆம் இலக்க கடிதத்தின் 4 ஆம் பந்தி.	பல்கலைக்கழக சேவை மேல்முறையீட்டுச் சபையின் கட்டளை மற்றும் நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்ட கருத்தின் பிரகாரம் 2015 யூன் 24 முதல் அமுலுக்கு வரும் வகையில் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் விரிவுரையாளர் ஒருவர் 2011 யூலை 03 முதல் அமுலுக்கு வரும் வகையில் தரம் II சிரேஷ்ட விரிவுரையாளர் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுளார். இதன் விளைவாக, 2011 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில், விரிவுரையாளருக்கு ரூபா 3,208,006 தனிப்பட்ட படிகள் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளன.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(எ) இன்படி பல்கலைக்கழகம் அதன் அதிகாரம், செயல்பாடுகள் மற்றும் கடமைகளை சரிவர செயல்படவில்லை என்பதைக் குறிப்பிடுவது தவிர;

(அ) 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கல்விசார் பதவியணியினிற்கான நெறிமுறைகள் மற்றும் கல்விப் பொறுப்புக்கூறலின் பிரகாரம் தலைவர், தலைமை பேராசிரியர், பேராசிரியர், சிரேஸ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர் தரம் I மற்றும் பயிற்றுவிப்பாளர் தரம் II ஆகியோரால் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்ச மாணவர் தொடர்பு நேரம் தனிப்பட்ட நேர அட்டவணையில் முறையே 180, 300, 360, 380, 450, 480 மற்றும் 510 மணிநேரங்கள் என பிரதிபலிக்க வேண்டும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் 6 பீடங்களில் உள்ள 100 கல்விசார் பதவியணியினரிடையே 38,580 மாணவர் தொடர்பு நேரம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும், மேற்படி விதிமுறைகளில் 47 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17,948 மணிநேரம் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர் ஆராய்ச்சி அல்லது தொழில்துறை வேலைவாய்ப்பு, மருத்துவப் பணிகள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மேற்பார்வைக்கான பணி விதிமுறை ஒதுக்கீட்டை நிருபிப்பதற்கு எந்த அறிக்கையும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாததால் மொத்த மாணவர் தொடர்பு நேரம் மற்றும் கல்விசார் பதவியணியினரின் மொத்த பணிச்சுமையை பிரதிபலிக்கும் பணி விதிமுறைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகம் ஒரு வழிகாட்டலை உருவாக்கியுள்ளது என்பதைக் கண்டறிய முடியவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் தற்போதைய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் தொழில் சந்தை மற்றும் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் பாடத்திட்டத்தில் தொழில்நுட்ப பாடங்கள் மற்றும் மொழி திறன்கள் ஆகியவை எப்போதும் மாறிவரும் தொழில் சந்தைக்கு ஏற்றவாறு உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், விவசாயம், தொழிநுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானம் போன்ற 03 பீடங்களின் பாடத்திட்டங்கள் ஆரம்பத்திலிருந்து மீளாய்வு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(இ) வணிக முகாமைத்துவமாணிக்கான வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மாணவர்களின் வழிகாட்டி புத்தகத்தின் பிரகாரம் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான குறைந்தபட்ச கால அளவு 03 கல்வி ஆண்டுகள் ஆக காணப்பட்ட போதிலும் 2016/2017 ஆம் கல்வியாண்டிற்கான வணிக முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஐந்து வருடங்களாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதால் மாணவர்களின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புக்கள் மோசமாகப் பாதிக்கப்படும்.

(ஈ) வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறிகளிற்கான மையம் மற்றும் கலை மற்றும் கலாச்சார பீடத்தால் 10 ஆண்டுகளிற்கு மேலாக கலைமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியத்தில் உள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் கடந்த 10 வருடங்களில் பிராந்தியத்தில் வெளிவாரி கலைமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வாய்ப்பை இழந்துள்ளனர். அதேநேரம் அத்தகைய மாணவர்கள் ஏனைய மாவட்டம் அல்லது மாகாணத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர வேண்டியிருந்தது. மேலும், பல்கலைக்கழகத்தால் 2018 முதல் M.Phil, பட்டம், டிப்ளமோ மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் போன்ற 11 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12(ஏ) இன்படி பல்கலைக்கழகத்தின் வளம், சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், சிறப்பாகவும் காலக்கெடுவிற்குள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்கவும் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் குறிப்பிடுவது தவிர;

(அ) 2013 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் தனியார் நிறுவனத்திற்கு நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிப்பதற்காக ரூபா 6,247,846 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது முறையாக செம்மைப்படுத்தப்படாததுடன் சில கொடுக்கல் வாங்கல்கள் 2021 திசெம்பர் 31 அளவில் உள்ளிடப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள சிக்கல்களை புதுப்பித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் தற்போதுள்ள பௌதீக சொத்துக்களின் பெறுமதி, நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான சொத்துக்களின் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள சொத்துக்களின் பெறுமதி என்பவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்பட்டது. எனவே அத்தகைய பதிவேட்டைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்றதாகியிருந்தது.

(ஆ) முறையான சாத்தியவள ஆய்வு மற்றும் போதிய நிதியுதவியின்றி திருகோணமலை வளாகத்தில் உள்ளக வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் கட்டம்-I 2017 மே 02 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டதுடன் ஒப்பந்த பெறுமதி ரூபா 55,775,000 ஆக காணப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2017 நவம்பர் 01 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தம் 2017 நவம்பரில் கைவிடப்பட்டிருந்தது. பின்னர், ஒப்பந்தம் 2019 திசெம்பர் 03 இல் மீண்டும் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2022 மார்ச் 25 அளவில் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 45 சதவீதம் மாத்திரமேயாகும்.

(இ) திருகோணமலை வளாகத்திற்கான பல்நோக்கு கேட்போர் கூடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 674,467,920 ஒப்பந்தப் பெறுமதியுடன் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2020 நவம்பர் 04 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மார்ச் 25 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் 08 சதவீதம் மாத்திரமேயாகும். மேலும் ஒன்றரை ஆண்டு காலதாமதத்திற்குப் பின்னர் நிலவும் உயர் பணவீக்கம் மற்றும் விலை உயர்வு என்பன ஆரம்ப ஒப்பந்த தொகையை மோசமாகப் பாதிக்கும்.

2.3 வேறு விடயங்கள்

(அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 423,554,640 மொத்த பெறவேண்டிய மீதிகளின் 58 சதவீதத்தற்கு சமமான ரூபா 245,496,675 தொகை 03 முதல் 39 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேற்படி மொத்த பெறவேண்டியவைகளில் ஒப்பந்தங்களை மீறிய 70 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 151,365,855 பிணைப் பெறுமதி 10 முதல் 39 ஆண்டுகள் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு நாளின் இறுதியில் REPO வைப்பிலுள்ள பணத்தை வைப்பிலிட்டு மேலதிக வருமானத்தை மேலதிக வருமானத்தை ஈட்டுதல் ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள நடைமுறையாக காணப்படுகின்ற போதிலும் திருகோணமலை வளாகத்தின் பொறுப்பான அதிகாரிகள் அவ்வாறு செய்திருக்காததுடன் மீளாய்வாண்டின் ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நடைமுறைக் கணக்கில் ரூபா 50 மில்லியன் முதல் ரூபா 156 மில்லியன் வரையிலான வீச்சில் தொகையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 பீடங்கள் 680 செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தன. அவற்றில் 329 செயற்பாடுகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 213,000,000 மூலதன மானியங்களில் 41 சதவீதத்திற்கு சமமான ரூபா 86,490,795 தொகை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருக்காததுடன் ரூபா 33,500,000 தொகையான இன்னொரு மூலதன மானியம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வங்கிக் கணக்குகளில் உள்ள ரூபா 1,608,236 கூட்டுத்தொகையான வைப்புக்கள் 12 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கிக் கூற்றில தேறாத வைப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. தேறாததற்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2018 ஆம் ஆண்டில், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் சமர்ப்பித்த தேசிய சாம்பியன்ஸஷிப் தகைமை சான்றிதழின் அடிப்படையில், குறித்த விண்ணப்பதாரரை உடற்கல்வி பயிற்றுவிப்பாளர் தரம் II/I பதவிக்கு பல்கலைக்கழகம் ஆட்சேர்ப்பு செய்திருந்தது. எனினும் விண்ணப்பதாரர் அவ்வாறானதொரு போட்டியில் கலந்து கொண்டிருக்கவில்லை என்றும் சான்றிதழ் போலியானது என்றும் கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது.

(எ) 2016 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்தின் 15 காணிகளின் உரிமைத்துவத்தை தீர்ப்பதற்காக ரூபா 1,215,000 ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரிமைத்துவம் 2022 யூலை 25 வரை மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட ரூபா 3,482,240 அரசாங்க மானியங்கள் 03 முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தன.

(ஐ) இறுதி காலநீடிப்பின் பிரகாரம் 2020 மே மாதத்தில் ஆராய்ச்சியை பூர்த்தி செய்வதற்கு பேராசிரியர் ஒருவரிற்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 7,500,000 தொகை 2015 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஒதுக்கீட்டில் ரூபா 4,500,000 செலவிடப்பட்டிருந்தது, ஆனால் 2022 யூன் 28 வரையிலும் ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) உயர்கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தல் (AHEAD) செயற்திட்டத்தால் விவசாய பீடம் மற்றும் விஞ்ஞான பீடத்திற்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ரூபா 23,046,063 கூட்டுமொத்தமான நூற்று அறுபத்தைந்து தனிப்பட்ட கணனிகள், இருபத்து நான்கு Compact wall mount ஒலிபெருக்கிகள் மற்றும் நான்கு Sound Mixers ஒரு வருடத்திற்கும் மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 01 வருட உத்தரவாதக் காலப்பகுதி கடந்திருந்தது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், 2021 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்து 1978 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு

சார்பு இல.	கணக்காய்வு பத்தியின் மேற்கோள்கள்	முகாமைத்துவ பதிலளிப்பு
1.	**நிதிக்கூற்றுகள்**	
1.1	**முனைப்பழியான அபிப்பிராயம்**	
1.2	**முனைப்பழியான அபிப்பிராயத்தின் அடிப்படைகள்**	
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து வருமானங்களும் மிகை அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கப்பட வேண்டும், ஆனால் மீளாய்வாண்டின் போது ரூபா24,700,208 குறுங்கால முதலீட்டிலிருந்தான வட்டி வருமானமானது வருமானமாக இனங்காணப்படாமல் கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திற்கு (restricted fund) செலவு வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிதியம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.	ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பெறப்பட்ட வட்டி வருமானத்தின் விவரங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கையில் வருமானமாகப் பிரதிபலிக்காததற்கான காரணம் இணைப்பு 01 இல் விவரிக்கப்பட்டுள்ளது.
